DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
ANUSHAN
GOBIRAJ
416.219.3333
teamsmart.ca
ROYAL LEPAGE ignite

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1397 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 13, 2023

# போர்க் குற்றவாளிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான கனடிய அரசின் தடைகள்



கனடிய வெளிவிவகார அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பெற்ற மேற்படி தீர்மானத்தை வரவேற்று எமது தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"பொறுப்புக்கூறலை நோக்கிய இந்த நீண்டதும், வேதனையைத் தருவதும் அத்துடன் இதற்காக போராடி வந்த அனைத்து தரப்பினர்களோடும் தொடர்ந்து அணிவகுத்துச் செல்வதற்கான எனது உறுதிப்பாட்டை நான் என்றும் கடைப்பிடிப்பேன் என்றும் . முடிவில் நீதி வெல்லும் என்று நான் எப்போதும் நம்பிய வண்ணம் உள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்".

இவ்வாறு நமது பாராளுமன்ற உறுப்பினர்இந்த விடயம் தொடர்பாக விடுத்துள்ள தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(உள்ளே விபரமான அறிக்கை 5ம் பக்கத்தில்)

# நாளை சனிக்கிழமை ஸ்காபுறோவில் தான் கலந்து கொள்ளும் விழாவை சிறப்பிக்க 'நீயா? நானா? கோபிநாத்' கனடா வந்தடைந்தார்



நாளை 14-01-2023 தைப்பொங்கல் தினத்தன்று ஸ்காபுறோ **5183 Sheppard Avenue East** யில் அமைந்துள்ள சீனக் கலாச்சார நிலைய மண்டபத்தில் "நீயா நானா? புகழ் கோபிநாத் எம்மத்தியில் உரை நிகழ்த்த கனடா வந்துள்ளார். இசை நிகழ்ச்சியும் உண்டு.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் புதன்கிழமை பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய அவரை வரவேற்க அங்கு ஊடக மற்றும் துறைகள் சார்ந்த அன்பர்கள் அங்கு மகிழ்ச்சியுடன் கூடி மகிழ்ந்தனர்

இந்த நிகழ்ச்சிக்கான 50 டாலர் மற்றும் 20 டாலர் பெறுமதியான அனுமதிச் சீட்டுக்களை இணைய வழி ஊடாக தற்பொழுது பெற்றுக் கொள்ளலாம் அதற்கான இணைப்பு :- **www.universe.com**

மேலதிக விபரங்களுக்கு: 647 891 7725 அல்லது 647 762 9512

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

எங்கள் வாசகர் அன்பர்கள்,
விளம்பரதாரர்கள், மற்றும் அனைவருக்கும் எமது
தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள் 416-752-1524


Happy Thai Pongal
தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
Logan Kanapathi
MPP Markham — Thornhill
Tel: 905-305-1935
logan.kanapathico@pc.ola.org

# உதயன் கதிரோட்டம்

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## கடன் தொல்லைகள் கழுத்தை நெறித்தாலும் பயனற்ற அரசியல்வாதிகளின் அவசியமற்ற செலவுகள் அநியாயமாய் தொடர்கின்றன...

வெளிநாட்டுக் கடன்கள் என்னும் ஆழக் கடலில் மூழ்கிய வண்ணம் தத்தளிக்கும் இலங்கைக்கு வாங்கிய கடன் தொகைகளை திரும்பச் செலுத்தாத காரணத்தால் சில நாடுகள் நெருக்குவாரத்தை தொடர்ந்து மேற்கொள்வதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறான இலங்கை என்னும் மாங்களித் தீவை கடுமையான கடன் தொல்லைகள் அதன் கழுத்தை நெறித்தாலும் பயனற்ற அரசியல்வாதிகளின் அவசியமற்ற செலவுகள் அநியாயமாய் தொடர்கின்றன அத்துடன் அங்கு அரசாங்கத்தில் பணியாற்றும் உயர் அதிகாரிகள் கூட செய்யும் வேலைகளுக்கு மேலாக சம்பளத்தையும் விசேட படிகளையும் பெற்று வருவதாகவும் பொருளாதார ஆய்வாளர்கள் இலங்கையிலிருந்து கட்டுரைகளை வடித்த வண்ணம் உள்ளனர்.

இலங்கையில் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலர் தங்கள் தொகுதி மக்களுக்கு கூட ஒரு சேவையையும் செய்யும் அளவிற்கு அங்கு நிதிப் பற்றாக்குறை நிலவுகின்றது. ஆனால், மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்த சம்பளம், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொலிஸ் மற்றும் இராணுவம் ஆகியோருக்கான சம்பளம் மற்றும் விசேட படிகள் போன்றவை மக்களின் வரிப்பணத்தில் வீண் செலவுகளாக தற்போது காணப்படுவதாகவும் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் தங்கள் கட்டுரைகளில் இலங்கை அரசாங்கத்தை எச்சரித்து வருகின்றனர்.

நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று இலங்கையில் பொருளாதார சீரழி ஆரம்பித்து அவை அரசியல் தலைவர்களின் ஊழல் மற்றும் மோசடிகள் காரணமாகவே ஏற்பட்டன என்பதை உணர்ந்து கொண்ட போராட்டக்காரர்கள் நடத்திய உணர்வுகள் நிறைந்த தொடர் போராட்டம் வெற்றிபெற்றது போன்று காணப்பட்டாலும் இறுதியில் அந்தப் போராட்டம் தோற்கடிக்கடிக்கப்பட்டு தகுதியற்ற ஜனாதிபதியாக ரணில் என்னும் 'தந்திரமான மனிதர்' பதவியேற்றார்.

அவர் அனுபவிக்கும் சலுகைகள் மற்றும் சம்பளம் போன்றைவை நாட்டின் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தற்காலிகமாகவேனும் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோசங்களும் எழுந்து வருகின்றன.

பங்களாதேஸ் நாடு இலங்கைக்கு வழங்கிய 200 மில்லியன் டெ-ாலர் கடனை திருப்பிச் செலுத்த இலங்கைக்கு மேலும் 6 மாதங்கள் அவ-காசம் கொடுத்துள்ளதாக வந்து செய்தியின் படி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சரின் தலையில் இந்த 'பாரத்தை' ஏற்றிவைத்து தீர்வு காணச் சொல்லியுள்ளதாக அறியப்படுகின்றது

பொருளாதார நெருக்கடி காரணமாக திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிக்குமாறு இலங்கை கோரியதை அடுத்து, 200 மில்லியன் டொலர் கடனைத் திருப்பிச் செலுத்த இலங்கைக்கு மேலும் ஆறு மாத கால அவகாசத்தை பங்களாதேஷ் வங்கி வழங்கியுள்ளது எனத் தெரியவருகின்றது

பங்களாதேஷ மத்திய வங்கியின் சிரேஸ்ட அதிகாரி ஒருவர், பெயர் குறிப்பிட விரும்பாத நிலையில், பங்களாதேஷின் ஆங்கிலப் பத்திரிகையானது பங்களாதேஷ வங்கியின் பணிப்பாளர்கள் குழு, திருப்பிச் செலுத்தும் காலத்தை நீட்டித்துள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது

மே 2021 இல் இலங்கை பங்களாதேஷிடம் இருந்து 200 மில்லியன் டொலர்களை கடனாகப் பெற்று, கடந்த 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்தத் திட்டமிடப்பட்டது, ஆனால் அதைச் செய்யத் தவறிவிட்டது.

கடந்த ஆண்டு ஏப்ரலில், இலங்கை தனது 51 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என அறிவித்தது.

இரு நாடுகளுக்குமிடையிலான உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை கடனை மார்ச் மாதத்திற்குள் திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்.

இலங்கை இன்னமும் அந்நிய செலாவணி இருப்புக்களின் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்கிறது, இது திருப்பிச் செலுத்தும் காலத்தை நீடிக்கக் கோர வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

பங்களாதேஷ் மத்திய வங்கி அதன் அந்நிய செலாவணி கையிருப்பு வேகமாக குறைந்து வரும் நேரத்தில் காலக்கெடுவை நீடித்துள்ளது. புதிய காலக்கெடுவின்படி, இந்தாண்டு செப்டெம்பர் மாதத்திற்குள் இலங்கை கடனை திருப்பிச் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது

பங்களாதேஷ் அரசாங்கமானது ஏற்கனவே சர்வதேச நாணய நிதியம் உட்பட பல தரப்பு கடன் வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து கடன் உதவ-ியை நாடியுள்ளது. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்குத.

இவ்வாறான நிலையில் இலங்கை வெளிநாடுகள் வழங்கிய கடன்கள் காரணமாக தடுமாறும் நிலையிருக்கும் போது, அரசியல் தலைவர்களும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மேலும் உயர் அரச அதி-காரிகளும் சுகபோகங்களை அனுபவித்து இலங்னையின் பொருளாதார சீரழிவை இன்னும் மோசமான நிலைக்கு தள்ளுகின்றார்கள் என்பதை மக்கள் உணரவேண்டும் என்பதையே நாம் இவ்வாரத்தின் கதிரோட்டத்தின் மூலமா-கச் சொல்ல முயலுகின்றோம்.

(பின்பக்கத் தொடர்ச்சி)

## ஸ்காபுறோவில் உள்ள Frontline Community Centre நிறுவனம் நடத்திய பொங்கல் விழாவில் நீயா நானா "கோபிநாத்







எதிர்வரும் 14-01-2023 அன்று மாலை 6.00 மணிக்கு ஸ்காபுறோவில் உள்ள சீனக்கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள நடைபெறவுள்ள "நீயா நானா" புகழ் கோபிநாத் அவர்களுடன் ஒரு மா-லைப் பொழுது என்னும் பல்சுவை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவென கனடாவிற்கு வருகை தந்துள்ள கோபிநாத் அவர்களை சேவை வழங்கும் நிறுவ-னமான **Frontline Community Centre** இனது தலைமை நிறைவேற்று அதிகாரி திருமதி விஜயா குலா கோபிநாத் அவர்களையும் அவரது குழுவி-னரையும் வாசலில் வரவேற்று மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்

தொடர்ந்து **Frontline Community Centre** நிறுவனத்தின் அங்கத்தவர்கள் பலர் நடனம் பாடல் மற்றும் நடிப்பு ஆகியவற்றை மேடையில் வழங்கினர். அங்கு கோபிநாத் அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் நிகழ்வில் கலந்து கொண்டு அனைவரையும் மகிழ்வித்தார்.

அங்கு சர்க்கரைப் பொங்கல் பானையில் பொங்கி வழிந்தபோதும் பின்னர் அரிசியை பானையில் இட்ட வேளையில் அழைக்கப்பெற்ற ஏனையய சிறப்பு விருந்தினர்களோடும் பங்கெடுத்து தைப்பொங்கலை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தார்.

அங்கு இன்னுமொரு சிறப்பு நிகழ்வும் இடம் பெற்றது. ஒரு எழுத்தாளராக எங்கள்

கோபிநாத் எழுதிய "நல்லதா நாலு விசயம்" என்னும் நூலை கனடாவில் வெளியிட வேண்டும் என்ற அவரது விருப்பின் பேரில் அங்கு வெளியிடப்பெற்றது.

அதன் சிறப்புப் பிரதியை பிரபல நிதி ஆலோசகரும் வீடு விற்பனை நிறுவனத்தின் அதிபருமான செல்வா வெற்றிவேல் அவர்கள்

கோபிநாத் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். இந்த நிகழ்ச்சியை உதயன் லோகேந்திரலிங்கம் தொகுத்து வழங்கினார்.

**Administrative Assistant Needed**

A small office in Scarborough is looking for an Administrative Assistant (Part-Time).
Applicants with Computer Skills in Accounting and should be able to perform other office duties.
Interested Applicants should send their resumes to email address below :

admin@cyecstoronto.ca

**BUNGALOW HOUSE FOR RENT**

Brimley & Lawrence சந்திப்பிற்கு அருகில்
3 Bedroom house (upstairs) with 1 kitchen & washroom, Large living hall with Dining space, Washer & Dryer, 3 Parking spaces வாடகைக்கு உண்டு.
Close to SP Grocery store (Sri Lankan), 8mins drive to Scarborough Town Center, & 6mins drive to Scarborough Health Network- General Hospital.
AVAILABLE from March 1st 2023
Call: (647) 995-4043
(647) 719-1220

# உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## கனடா பெருமையுடன் வழங்கும்
## உரும்பிராய் பாடசாலைகளின்

UHCOSA
Est 1994

# 27 வது பொங்கல் விழா

## PONGAL VIZHA




தொடரும் பொங்கல் விழாவில்
அதி சிறந்த இயல், இசை, நாடக
நிகழ்வுகளை கண்டுகளிக்க
அரியதோர் வாய்ப்பு.

ஜனவரி மாதம் 21 ஆம் திகதி
சனிக்கிழமை மாலை 5 : 30 மணி



## THAMIL ISAI KALAA MANRAM
**1120 TAPSCOTT RD, SCARBOROUGH M1X 1E8**

நிகழ்ச்சி தொடர்பான மேலதிக விரங்களுக்கு :

கதிரமலைநாதன் : 647 287 4738
சுமி : 647 710 7816
வரதன்: 416 805 7392

urumpiraischoolsosa.ca@gmail.com

விளம்பர அனுசரணையாளர். சாந்தா பஞ்சலிங்கம்





# போர்க் குற்றவாளிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ச ஆகியோருக்கு எதிரான கனேடிய தடைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் அறிக்கை

கனடிய செய்திகள் Canadian News

**"பொறுப்புக்கூறலை நோக்கிய இந்த நீண்டதும், வேதனையானதும் மற்றும் முக்கியமான பயணத்தில் உயிர் பிழைத்தவர்களுடன் தொடர்ந்து அணிவகுத்துச் செல்வதற்கான எனது உறுதிப்பாட்டை நான் என்றும் கடைப்பிடிப்பேன் என்றும், முடிவில் நீதி வெல்லும் என்று நான் எப்போதும் நம்பிய வண்ணம் உள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்".**

**இவ்வாறு நமது பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

போர்க் குற்றவாளிகளான மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிரான கனேடிய தடைகள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியின் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து ஏறக்குறைய பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகவும் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது சகோதரர் கோட்டாபாய ராஜபக்ச மீது கனடிய அரசாங்கம் விசேட பொருளாதார நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் தடைகளை விதித்துள்ளது. அதே காலகட்டத்தில் பாதுகாப்புச் செயலாளராக இருந்தவர் கோட்டாபய ராஜபக்ச என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜபக்ச சகோதரர்களுக்கு மேலதிகமாக, இன்று விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளில் இலங்கை இராணுவப் பணியாளர் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்க மற்றும் கடற்படை உளவுத்துறை அதிகாரி லெப்டினன்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோர் அடங்குவர் என்பதும் கவனிக்கத்தக்கது.

இன்று இலங்கை தொடர்பான சர்வதேச பொறுப்புக்கூறலுக்கான ஆழமான வரலாற்றின் ஆரம்ப நாளாகும், இது பல உயிர் பிழைத்தவர்களுக்கும், உயிரிழந்தவர்களுக்கும் மற்றும் தமிழ் மக்களுக்கும் நீதி வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு முன்னோக்கி நகர்வதற்கான பலத்தை அளிக்கிறது. இதுவரை, இரண்டு ராஜபக்ச சகோதரர்களும், இலங்கையில் உள்ள தமிழ் மக்களுக்கு எதிராக அவர்கள் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பல சர்வதேச போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு எந்தப் பொறுப்பும் கூறாமல் தொடர்ச்சியாக மௌனமாக இருந்து வருகின்றனர்.

இந்த நேரத்தில் கனடிய வெளிவிவகார அமைச்சர் கௌரவ அவர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மெலனி ஜோலி, பாராளுமன்ற சகாக்கள், பல அமைப்புகள், தனிநபர்கள், தமிழ் சமூகத்தின் உறுப்பினர்கள் மற்றும் மிக முக்கியமாக இன்று தடைகளை வாதிடவும் விதிக்கவும் கடுமையாக உழைத்தவர்கள் அனைவருக்கும் எனது நன்றி.




## Statement by MP Gary Anandasangaree on the Canadian Sanctions Against War Criminals Mahinda Rajapaksa and Gotabaya Rajapaksa

After nearly fourteen years since the end of the armed conflict in Sri Lanka, Canada has imposed sanctions under the Special Economic Measures Act on the two most senior members of the government, Mahinda Rajapaksa who was President and Minister of Defense in 2009, and his brother, Gotabaya Rajapaksa, who was the Secretary of Defense at the same period.

In addition to the Rajapaksa brothers, the sanctions imposed today include Sri Lankan Army Staff Sergeant Sunil Ratnayake and Navy intelligence officer Lieutenant Commander Chandana Prasad Hettiarachchi.

Today is a deeply historical day for international accountability relating to Sri Lanka, one that gives us the strength to move forward to ensure that justice is served for the many survivors, those who perished, and the Tamil people. Until now, the two Rajapaksa brothers have evaded any accountability for the many international war crimes, crimes against humanity, and genocide that they are both accused to have committed against the Tamil population on the island.

I would like to extend my appreciation to the Minister of Foreign Affairs, the Hon. Melanie Joly, parliamentary colleagues, the many organizations, individuals, members of the Tamil community, and most importantly the survivors who have collectively worked hard to advocate and impose the sanctions today.

I renew my commitment to continue to march with the survivors in this long, painful, and important journey towards accountability. I have always believed, that in the end, justice will prevail.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# சேது சமுத்திர திட்டத்தை செயல்படுத்த வேண்டும்: சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றம்

சேது சமுத்திரத் திட்டத்தைத் தாமதமின்றி நிறைவேற்ற மத்திய அரசு முன்வர வேண்டும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டுவந்த தனிநபர் தீர்மானம், அனைத்துக் கட்சி ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரம் முடிந்ததும் நேரமில்லா நேரத்தில் சேது சமுத்திரத் திட்டம் குறித்த தனி தீர்மானத்தை முதல்வர் ஸ்டாலின் முன்மொழிந்தார்.

அப்போது அவர் பேசியதாவது:பாக் நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாவை இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்பட வேண்டிய கால்வாயின் பெயர்தான் சேது சமுத்திரத் திட்டம். இது தமிழகம் மற்றும் இந்திய நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும். இந்த திட்டத்தை ஆரம்பம் முதல் ஆதரித்து வந்த அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா, திடீரென தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, இந்த திட்டத்துக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். தற்போது இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்த திட்டத்தைப் போராடியும் வாதாடியும் செயல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான், இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பேரவை இதை நிறைவேற்றித் தரவேண்டும்.1860ல் ரூ.50 லட்சத்தில் கமாண்டர் டெய்லர் என்பவரால் உருவாக்கப்பட்டது இந்த திட்டம். 1955ல் தமிழகத்தின் சிறந்த நிபுணர் ஏ.ராமசாமி முதலியார் தலைமையிலான குழு, 1963ல் நடைபெற்ற மத்திய



அமைச்சரவைக் கூட்டம், 1964ல் அமைக்கப்பட்ட டாக்டர் நாகேந்திர சிங் தலைமையிலான உயர்நிலைக் குழு ஆகியவை பல ஆண்டுகள் ஆய்வுசெய்து, இந்த திட்டத்தை வடிவமைத்தன.இதன் வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் பணிகள் மேற்கொள்ளும் வகையில் திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் பிரதமராக இருந்த வாஜ்பாய், இந்த திட்டம் தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வுக்கு அனுமதி அளித்தார். அப்போது திட்டத்தின் வழித்தடம் இறுதி செய்யப்பட்டது.

ரூ.2,427 கோடி மதிப்பில்...: அடுத்துவந்த காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது, அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கால் 2004ம் ஆண்டில் ரூ.2,427 கோடி மதிப்பில் இந்த திட்டத்தை செயல்படுத்த அனுமதிக்கப்பட்டது. முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி, ஐக்கிய முற்போக்கு கூட்டணி தலைவர் சோனியா காந்தி முன்னிலையில், சேது சமுத்திரத் திட்டத்தை பிரதமர் மன்மோகன் சிங் 2005 ஜூலை 2ம் தேதி தொடங்கிவைத்தார். பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது.எந்த காரணத்தைக் கூறி முட்டுக்கட்டை போடப்பட்டதோ, அதையே நிராகரிக்கும் வகையில் தற்போது "ராமேசுவரம் கடற்பகுதியில் இருந்தது எந்த மாதிரியான கட்டுமானம் என்பதைக் கூறுவது கடினம்" என்று மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இந்நிலையில், சேது சமுத்திரத் திட்டத்தை இனியும் நிறைவேற்றாமல் இருப்பது, தமிழகத்தின் முன்னேற்றம், வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் நிகழ்வாகும்.எனவே, தாமதமின்றி சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற, மத்திய அரசு முன்வரவேண்டும். இதை செயல்படுத்த தமிழக அரசு அனைத்து ஒத்துழைப்பும் கொடுக்கும் என்று பேரவை ஒருமனதாகத் தீர்மானிக்கிறது. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

தொடர்ந்து, மீனவர்களின் கருத்துகளைக் கேட்க வேண்டும் என்று அதிமுகவும், திட்டத்தை மறுஆய்வு செய்ய வேண்டும் என்று பாஜக தரப்பிலும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இதுதவிர, காங்கிரஸ், பாமக, விசிக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மதிமுக, மநேம, கொமதேக, தமிழக வாழ்வுரிமை கட்சிகளும் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தன.

# பொங்கல் சிறப்பு பேருந்துகள் இயக்கம் தொடக்கம்: சென்னையில் இருந்து 80 ஆயிரம் பேர் பயணம்

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பேருந்துகள் இயக்கம் நேற்று தொடங்கியது. முதல் நாளில் சென்னையில் இருந்து 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சொந்த ஊர்களுக்குப் பயணித்தனர். பொங்கல் பண்டிகையையொட்டி பொதுமக்கள் தங்கள்சொந்த ஊர்களுக்குச் செல்லும் வகையில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் அறிவித்தார்.

அதன்படி, ஜன.12, 13, 14 ஆகிய நாட்களில் சிறப்பு பேருந்துகள் உட்பட 16,932 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.அதன்படி முதல் நாளான நேற்று, சென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2,100 பேருந்துகளுடன் 651 சிறப்பு பேருந்துகளும், பிற ஊர்களில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு 1,508 சிறப்பு பேருந்துகளும் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னையைப் பொறுத்தவரை 6 சிறப்பு பேருந்து நிலையங்கள் மூலம் பேருந்துகள் இயக்கப்பட்டன. இந்த பேருந்துகளை இணைக்கும் வகையில் 340 மாநகர பேருந்துகள் இயங்கின.

கோயம்பேட்டில் 10 முன்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதேபோல் தாம்பரம் மெப்ஸ், பூந்தமல்லி ஆகிய இடங்களில் தலா 1 முன்பதிவு மையம்உள்ளது. இதில் முன்பதிவு செய்துபயணிக்கவும், முன்பதிவு செய்யாமல் நேரடியாக பேருந்துகளில் பயணிக்கும் வகையிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.கோயம்பேட்டில் இருந்து புறப்பட்ட அரசு விரைவு பேருந்துகள் அனைத்தும், பூந்தமல்லி, நசரத்பேட்டை, வண்டலூர் வழியாக இயக்கப்பட்டன. இதனால் தாம்பரம், பெருங்களத்தூரில் இருந்து தென் தமிழகம் செல்ல முன்பதிவுசெய்த பயணிகள் அனைவரும் வண்டலூர், கிளாம்பாக்கம் போன்றஇடங்களுக்குச் சென்று பேருந்துகளில் பயணித்தனர்.இதுகுறித்து போக்குவரத்து துறை அதிகாரிகள் கூறியதாவது: வியாழக்கிழமை குறைந்த அளவிலான மக்களே செல்வார்கள் என்பதால் 2,159 சிறப்பு பேருந்துகள் மட்டுமே இயக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதேநேரம், பயணிகளின் தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகளை இயக்கவும் அறிவுறுத்தியிருந்தோம்.

சிறப்பு பேருந்துகளில் சென்னையில் இருந்து சுமார் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணித்தனர். சனிக்கிழமை போகி பண்டிகை விடுமுறை என்பதால் வெள்ளிக்கிழமை (இன்று) அதிக அளவில் மக்கள் பயணிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம். எனவேசென்னையில் இருந்து வழக்கமாக இயக்கப்படும் 2,100 பேருந்துகளுடன் 1,855 சிறப்பு பேருந்துகளும், பிற ஊர்களில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு 2,214 சிறப்பு பேருந்துகளும் இயக்க ஏற்பாடு செய்துள்ளோம்.முன்பதிவைப் பொறுத்தவரை ஜன.11 முதல் 20ம் தேதி வரையிலான காலத்தில் சென்னையில் இருந்து செல்ல 74,242 பேரும், பிற ஊர்களில் இருந்து பயணிக்க 91,725 என மொத்தம் 1.65 லட்சம் பேர் முன்பதிவு செய்துள்ளனர். டிஎன்எஸ்டிசி செயலி மற்றும் டீஸீஸீடீ.வீஸீ என்ற இணையதளத்தில் முன்பதிவு செய்யலாம். பேருந்து இயக்க விவரம் மற்றும் புகார்களுக்கு 9445014450, 9445014436 ஆகிய எண்களை அணுகலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# அரசு மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் ஆளுநர் முட்டுக்கட்டை முதல்வர் ஸ்டாலின் குற்றச்சாட்டு



மரபுகளை மீறாமல் செயல்படுமாறு தமிழக ஆளுநருக்கு அறிவுறுத்த வேண்டும் என்று குடியரசுத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.தமிழக சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, எம்.பி.க்கள் ஆ.ராசா, வில்சன், என்.ஆர்.இளங்கோ ஆகியோர் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை நேற்று சந்தித்து, தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரையாற்றியதில் ஏற்பட்ட சர்ச்சை தொடர்பான முதல்வர் மு.க.ஸ்டாலினின் புகார் கடிதத்தை வழங்கினர்.அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது:

ஒரு மாநிலத்தில் ஆளுநர் பதவி என்பது மிகவும் உயர்வானது. அரசியல் கருத்துகளுக்கு, வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவராக ஆளுநர் இருக்க வேண்டும்.ஆனால், தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, தமிழ்நாடு அரசுடன் கருத்தியல், அரசியல் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார். இது அரசியலமைப்புச் சட்டத்துக்கு முற்றிலும் மாறானது. தமிழக மக்கள், பண்பாடு, இலக்கியம், அரசியல் போன்ற அனைத்தின் மீதும் ஒரு எதிர் மனப்பாங்கைக் கொண்டுள்ளார்.பொதுமேடைகளில் தமிழ்ப்பண்பாடு, இலக்கியம் மற்றும்சமூக அமைப்புக்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்து வருகிறார். அதன் ஒரு பகுதியாகவே, சட்டப்பேரவையில் அவர் நடந்து கொண்டவிதம், பேரவை மாண்பை அவமதிக்கும் வகையில் இருந்தது.

ஆளுநர் தனது தனிப்பட்ட அரசியல் கருத்துகளுக்கு ஏற்ப, உரையில் உள்ள கருத்துகளை மாற்றவோ, புதிய கருத்துகளை சேர்க்கவோ கூடாது. ஆனால், அரசியல் சட்ட விதிகளையும், மரபுகளையும் மீறி, அரசால் தயாரிக்கப்பட்டு, அவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட உரையின் பல பகுதிகளை வாசிக்காமல் தவிர்த்தார். எனவே, மக்களாட்சித் தத்துவத்தை உயர்த்திப் பிடிக்கவும், அரசியலமைப்புச் சட்டத்தின் மாண்பைக் காக்கவும் குடியரசுத் தலைவர் முன்வர வேண்டும்.அதேபோல, முக்கியமான அரசு மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல், அவற்றுக்கு ஆளுநர் முட்டுக்கட்டை போடுவது, தமிழக அரசின் செயல்பாட்டு வேகத்தைக் குறைக்கிறது. எனவே, குடியரசுத் தலைவர் இதில் தலையிட்டு, அமைச்சரவையின் வழிகாட்டுதல் மற்றும் அறிவுரைகளின்படி ஆளுநர் நடப்பதை உறுதி செய்ய வேண்டும். மரபுகளை மீறாமல், தமிழ்நாடு மற்றும் தமிழக மக்களுக்கு ஏற்ற வகையில் பணியாற்றுமாறு அறிவுறுத்த வேண்டும். இவ்வாறு கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் டி.ஆர்.பாலு கூறும்போது, நாங்கள் அளித்த கடிதத்தை படித்துப் பார்த்த குடியரசுத் தலைவர், நான் பார்த்துக் கொள்கிறேன் என கூறியதாகத் தெரிவித்தார்.இந்த சூழலில், ஆளுநர் ஆர்.என்.ரவி இன்று டெல்லி புறப்பட்டுச் செல்கிறார். அங்கு அவர் குடியரசுத் தலைவர், உள்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து, நடந்த நிகழ்வுகள் குறித்து விளக்குவார் என்று கூறப்படுகிறது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடமாகாணத்தை சேர்ந்த அபிவிருத்தி லொத்தர் சபை வெற்றியாளர்களுக்கு காசோலைகள் வழங்கி வைப்பு

அபிவிருத்தி லொத்தர் சபையின் கடந்த இரண்டு மாதங்களில் வடமாகாணத்தில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா தலைமையில் சனிக்கிழமை (7) காலை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டது.

வடகிழக்கு பிராந்திய முகாமையாளர் குமாரசிறி, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட விற்பனை மேம்படுத்தல் அதிகாரி. தவகோகுலன், கிளிநொச்சி





மற்றும் வவுனியா விற்பனை மேம்படுத்தல் அதிகாரி பிரதீபன் ஆகியோரின் முன்னிலையில் மன்னார் மாவட்டத்தில் சனதா ரிக்கற்றின் மூலம் வெற்றிபெற்ற வெற்றியாளருக்கு மாபெரும் சுப்பர் பரிசான 3 கோடி 26 இலட்சம் ரூபா காசோலை மற்றும் பளைபிரதேசத்தில் வலம்புரி அதிஷ்ட ரிக்கற்மூலம் வெற்றிபெற்ற வெற்றியாளருக்கு 20 இலட்சம் காசோலை மற்றும் சங்கானை, யாழ்பாணம், சாவகச்சேரி, வவுனியா



மன்னார் பிரதேசங்களில் சனிதா, அதோடிபதி, கப்ருக்க அதிஷ்ட ரிக்கறூடாக வெற்றிபெற்ற வெற்றியாளர்களுக்கு தலா 10 இலட்சம் காசோலைகளும் ஆளுநர் ஜீவன் தியாகராசா அவர்களால் வழங்கப்பட்டது.



# கூட்டணி குறித்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பேச்சு — செல்வம் அடைக்கலநாதன்!

தமிழரசுக் கட்சியை தவிர்ந்த ஏனைய கட்சிகள் கூட்டமைப்பாக தேர்தலில் போட்டியிட உள்ளதாக ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாடல்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்தேசிய மக்கள் கூட்டணி, ஜனநாயக போராளிகள் கட்சி ஆகியன இணைந்து இந்த கூட்டமைப்பு அமைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்தேசிய மக்கள் முன்னணி யையும் இந்த கூட்டமைப்பில் இணைத்துக்கொள்ள பேச்சு நடத்தப்படும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

# வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் பொலிஸ் சார்ஜன் வீதியில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்பு



வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் 10-01-2023 காலை 6.30 மணியளவில் பொலிஸ் சார்ஜன் ஒருவர் வீதியில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தாண்டிக்குளத்தில் இருந்து புதுக்குளம் செல்லும் பிரதான வீதியில் தாண்டிக்குளம் சந்தியிலிருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள வளைவுக்கு அண்மித்த பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் சடலம் ஒன்று காணப்படுவதாக பொதுமகனொருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

குறித்த மரணத்திற்கு காரணம் விபத்தாக இருக்கலாம் என தெரிவிக்கப்படும் நிலையில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் மிகிந்தலை பகுதியை சேர்ந்த 45 வயதுடைய பொலிஸ் சார்ஜன் வசந்த சந்தன நாயக்க என்பரே சடலமாக மீட்கப்பட்ட வராவர்.


THANA INSURANCE Inc.

Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 27 | 23 | 29 | 27 | 35 | 30 | 44 | 36 | 61 | 48 | 84 | 63 |
| 25 K | 37 | 33 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 | 148 | 105 |
| 50 K | 69 | 62 | 88 | 74 | 103 | 92 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 240 | 406 | 318 | N/A | N/A |
| 200 K | 260 | 231 | 338 | 282 | 398 | 353 | N/A | N/A | N/A | N/A | N/A | N/A |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 | 450 | 296 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | N/A | N/A | N/A | N/A |

INVESTMENTS




Protect
once
helps your life



LIFE INSURANCE
ஆயுட் காப்புறுதி
Thana Manickavasagar
Insurance Broker
Cell : 416-728-5772
Office : 416-519-3896
thana7@gmail.com www.thana.ca
fax : 647-547-8147
80 Nashndene Road ,#D218, Scarborough,ON,M1V 5E4

# உள்ளூராட்சித் தேர்தல்: தொடரும் குழப்பங்கள்

- நடராசா லோகதயாளன்




இலங்கையில் அடிப்படை அதிகார அலகான உள்ளூராட்சி சபைகளிற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டபடி நடைபெறுமா இல்லையா என்ற கேள்வி தொடரும் நிலையில் தமிழ்க் கட்சிகள் அதற்குத் தயாராகி வருகின்றன.

எனினும் பெரும்பாலான தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமையின்மையே காணப்படுகிறது. அவ்வாறான நிலையில் வாக்குகள் பிரிவதால் அது தமிழ் மக்களிற்கே பின்னடைவாக அமையக் கூடும் எனும் கவலைகள் தெரிவித்தாலும் கட்சியில் இருந்து வெளியேறிய பலர் மீண்டும் இணைந்து கட்சிகள் பலமடையும் என்ற கருத்தும் வடக்கு கிழக்கு மக்களிடையே ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் தமிழர் தாயகப் பகுதியான வடக்கு கிழக்கில் பிரதான தமிழ் அரசியல் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் ஒருமித்த கருத்து இல்லாத நிலையே உள்ளது. நடைபெறக் கூடும் என்று எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 3 கட்சிகளும் தனித் தனியாகப் போட்டியிடுவது எனத் தீர்மானித்துள்ளனர். அதில் அங்கம் வகிக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ரெலோ மற்றும் புளட் ஆகிய கட்சிகள் கூட்டமைப்பாக இன்றி தனித் தனியாக போட்டியிடுவது என கொழும்பில் செவ்வாய்க்கிழமை (10) அன்று இடம்பெற்ற சந்திப்பில் தீர்மானித்துள்ளனர்.

இந்த மூன்று கட்சிகளும் தனித் தனியாகப் போட்டியிடும் அதே நேரம் கட்சிகள் விரும்பினால் தமக்குள் இணக்கத்தின் அடிப்படையிலும் செயல்பட முடியும் என்றும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேநேரம் 3 கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை இந்த தேர்தலில் உரிமை கோர முடியாது. தேர்தலின் பின்னர் கட்சிகள் பெறும் ஆசனங்களின் அடிப்படையில் ஓர் இணக்கத்தில் தொடர்ந்தும் கூட்டமைப்பாகச் செயல்படலாம் என அந்தக் கட்சிகளும் இணக்கம் கண்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அந்த கலந்துரையாடலில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ. சேனாதிராஜா, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், ஜெனா ஆகியோருடன் ஆர்.ஆர். மற்றும் ஹென்றி மகேந்திரன் உள்ளிட்டோர் பங்குகொண்டனர்.



## ஈ.பி.டி.பியிலும் குழப்பம்

ஈ.பி.டி.பியின் யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர்கள் நால்வர் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலிலே "போட்டியிட மாட்டோம்" என்னும் நிலையில் உறுதியாக இருந்து வருகின்றனர்.

இதன் காரணமாக இவர்களது வீட்டிற்கு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் ஐவர் அடங்கிய குழு சமரச முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் முன்னாள் முதல்வருடன், ஜீவன், செல்வ்வடிவேல் ஆசிரியர் உட்பட ஐவர் கலந்துகொண்டனர். இங்கே ஆரம்பத்தில் செல்வ வடிவேல் ஆசிரியரும் சிறிது ஆட்டம் கண்டு நின்றார் என்று தகவல்கள் கூறுகின்றன. இரண்டு மணிநேரம் நீடித்த இந்த சமரச முயற்சி பலனளிக்காததால் மூவரும் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பியில் இணைந்து போட்டியிட மறுத்து விட்டனர்.

இதன் காரணமாக நேரடியாக வட்டாரங்களில் போட்டியிடாவிடினும் பட்டியலில் பெயர் இணைக்கப்படும் என முன்னாள் முதல்வர் தெரிவித்துள்ளார். இதனையும் மூவரும் அடியோடு மறுத்துள்ளனர்.

இதேநேரம் ஈ.பி.டி.பி கட்சியில் தேர்தல் வேட்பு மனு எழுதுவதில் அனுபவம் மிக்கவர் என்று கட்சி நம்புபவர் கொழும்பில் அமைச்சரின் செயலகத்தில் பணியாற்றி வந்தார். அவர் அண்மையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். வடக்கு, கிழக்கு மாகாணதிற்கான பட்டியல் தயார் செய்யப்படுகின்றது.

வேட்புமனுக்கள் படிவங்களில் திங்கள் கிழமை எழுதப்படவுள்ளதாக உட்கட்சித் தகவல்கள்



தெரிவிக்கின்றன.

## கட்டுப் பணத்தைச் செலுத்தல்

நடைபெறுமா என்பது உறுதியாகத் தெரியாத நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஐந்து மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைத் தேர்தலிற்கான கட்டுப் பணத்தைச் செலுத்தியுள்ளது.

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள தலா 5 சபைகளிற்குமான கட்டுப் பணம் புதன்கிழமை (11) கட்சியினால் நியமிக்கப்பட்ட மாவட்ட முகவர்களால் செலுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு, கிளிநொச்சி, திருகோணமலை ஆகிய மாவட்டத்திலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தமது கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளனர்.

ஏனைய மாவட்டங்களில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அடுத்தடுத்த நாட்களில் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

இதேநேரம் கூட்டமைப்பில் ஒற்றுமை இல்லை அல்லது ஒரு கட்சி மேலாதிக்கம், ஒரு கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவது போன்ற குழப்பங்களின் காரணமாக வெளியேறும் அல்லது ஏற்கனவே வெளியேறிய கட்சிகள் மட்டத்திலும் ஒற்றுமை காணப்படுவதாக தெரியவில்லை. அங்கும் குழப்பமே நிலவுகின்றது.

அதாவது ஓர் கட்சியின் சின்னத்திலா அல்லது பொதுச் சின்னத்திலா எந்த சபை எந்தக் கட்சிக்கு, ஒரு சபையில் எத்தனை ஆசனம் எந்தக் கட்சிக்கு என்ற பலமான குழப்பம் அங்கும் காணப்படுவதனால் வெளியே உள்ள கட்சிகள் அனைத்தும் ஒரே கட்சியில் போட்டியிடுவார்கள் என்ற நம்பிக்கையும் கிடையாது. இதனால் வேட்புமனுத் தாக்கல் வரையில் கட்சிகள் மற்றும் கூட்டுகளின் எண்ணிக்கையும் அதிகரித்தே செல்லப்போகின்றது என்பதையே காணக்கூடியதாக உள்ளது.

# திருக்குறள் அமுதம் (நிலைமண்டில ஆசிரியப்பா)

-------------------------------

திருவள்ளுவர் தந்தார் திருக்குறள் அமுதமே!
கருத்தோடு சொன்னார் கவிதை தன்னையே!
விருப்போடு நாமும் விரும்பிப் படித்தே!
தருமத்தைக் கற்றுத் தரணியில் உய்வோம்
அறமும் பொருளும் அருமை இன்பமும்
சிறப்பாய் எமக்குச் சீராய்த் தந்தார்
மறந்திடா நாமும் மகிழ்வொடு கற்றே!
அறத்துடன் வாழ்ந்து அமைதி அடைவோம்
கடவுள் வாழ்த்தில் கனிவாய்த் தொடங்கி
அடக்க முடைமையில் அடியை வைத்து
இல்வாழ்க்கை சொல்லி இனியவை கூறல்வரை
கல்லாமை தொடங்கி கொல்லாமை தந்தார்
அன்புடமை நிலையாமை அருளுடைமை வெகுளாமை
நன்னெறியில் செல்வம் நயந்து சொன்னார்
நூற்றுமுப் பத்துமூன்று நுண்ணிய அதிகாரம்
போற்றும்படி தந்து புகழுடம்பு அடைந்தார்
ஆயிரத்து முன்னூற்று முப்பது அரும்குறள்
பாயிரமாய் எங்களுக்குப் பரிசாக அளித்தார்
பாரெலாம் போற்றும் பாகான திருக்குறளை
ஊரெலாம் கூட்டி ஒலிக்கச் செய்வோம்.
தமிழென்ற சொல்லை தன்குறளில் சொல்லாமல்
தமிழின் பெருமையை தரணியெலாம் விதைத்தார்
மொழிகள் எண்பதில் மொழிபெயர்த்த பொதுமறையை
வழிவழியாய்க் கற்று வாழ்வு பெறுவோமே!.

-------------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# கனடா இந்து

CANADA HINDU

*Published by Thurkeswaram, Sridurka Hindu Temple, 30 Carnforth Road, Toronto, ON M4A 2K7 TEL : 416-759 9648*

# துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை

**றொறன்ரோவில் அருட்பிரசித்தம் பெற்ற திருக்கோவிலான துர்க்கேஸ்வரத்தில் பாலஸ்தாபனம் நடைபெறவுள்ளது. ஜனவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பித்து, பூர்வாங்கக்கிரியைகளும், யாகபூஜைகளும் ஜனவரி 21ம் திகதி சனிக்கிழமையும் தொடர்ந்து நடைபெற்று, ஜனவரி 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:15 மணிக்கு பாலஸ்தாபனம் இடம் பெறும்.**

கனடாவில் மிகப்பெரும் கும்பாபிஷேகம் 2001ம் ஆண்டு, துர்க்கேஸ்வரத்தில் நடைபெற்றது யாவரும் அறிந்ததே. 2023ம் ஆண்டு மீண்டும் இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு ஏதுவாக, பாலஸ்தாபனத்தை 22-1-2023 ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்த ஆலயத்தினர் தீர்மானித்துள்ளனர். பாலஸ்தாபனம் பற்றிய விளக்கத்தினை ஆலய பிரதமகுருக்களிடம் கேட்டபோது,

"கடந்த காலங்களில் இவாலயத்தில் நடைபெற்ற பூஜைகள், ஹோமங்கள் மற்றும் அருட்பெருவிழாக்களால் அதிஅருட்சக்தி பெற்று விளங்கும் விக்கிரகங்களில் உள்ள சக்தியை மந்திரபூர்வமான கிரியைகளால் கும்பங்களில் வரவழைத்து, அதன் பின்னர் சன்னிதானங்களில் உள்ள விக்கிரகங்களை பாலாலயம் என அழைக்கப்பெறும் சிறு ஆலயத்தில் ஸ்தாபித்து, கும்பங்களை அபிஷேகித்து தெய்வங்களை வழிபடுவதற்கான விஷேட ஏற்பாடே பாலஸ்தாபனமாகும். பாலஸ்தானம் நிகழ்ந்த பின்னர், ஆலயத்தில் சன்னிதானங்கள் மீளப்புதுப்பிக்கப்பெறும். புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெறும். கும்பாபிஷேகத்துக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெறும். இவ்வாறாக, மூன்றரை மாதங்கள் நடைபெற்று பின்னர் மே மாதம் 4ம் திகதி, 2023ம் ஆண்டு வியாழக்கிழமை மஹாயாக மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்"

என்று சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள் தெரிவித்தார். ஆலயத்தில் ஏற்கெனவே புதிய வர்ணம் தீட்டும் திருப்பணிகள் ஆரம்பித்துவிட்டன. ராஜகோபுரத் திருப்பணிகள் பூர்த்தியுறும் நிலையில் உள்ளன. துர்க்கேஸ்வரம் கும்பாபிஷேகம் பற்றி பக்தர் ஒருவரிடம் கேட்டபோது,

"பக்தர்கள் அம்பாளின் திருவருளைப் பெறவேண்டும் என்பதற்காக பல சிறப்பான ஹோமங்களையும் வழிபாடுகளையும் இவ்வாலயம் தொடர்ந்து செய்துவருகிறது. எதையுமே மேன்மையாகவும் மகத்துவம் மிளிரவும் செய்யும் இவ்வாலயத்தின் கும்பாபிஷேகமும் அவ்வாறே அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை"

எனக் குறிப்பிட்டார்.

### துர்க்கேஸ்வரம் மஹாகணபதிப் பெருமானுக்கு விநாயக சஷ்டி வழிபாடு

**08-12-2022 வியாழன் முதல் 28-12-2022 புதன் வரை**

துர்க்கேஸ்வரத்தில் விநாயகர்சஷ்டி விரதத்தினை முன்னிட்டு, அலங்கார மண்டபத்தில் உயர்பீடத்தில் பஞ்சமுகவிநாயகர் வீற்றிருக்க, கும்பங்கள் நிலை நிறுத்தி, விம்பத்திலும் கும்பத்திலும் அருள் நிறைத்து, விநாயகருக்குப் பிரீதியான நைவேத்தியங்கள் படைத்து, அறுகினாலும், மலர்களினாலும் அர்ச்சித்து வழிபாடுகள் நிகழவிருக்கின்றன.

தினமும் மாலை 6.30 மணிக்கு கும்பபூஜை, சங்கல்ப்பம் நிகழ்ந்து, தொடர்ந்து மஹா கணபதிக்கு அபிஷேகம் நடைபெறும். இரவு 7.31 மணிக்கு விஷேட பூஜை, வழிபாடுகள் நிகழ்ந்து, தொடர்ந்து வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் துர்க்கேஸ்வரம் றொறன்ரோப் பெரும் பிள்ளையாருக்கு விஷேட வழிபாடுகள் நடைபெற்று, சுவாமி வீதிவலமும் அருட் தரிசனமும் பக்தர்களுக்கு கிட்டவுள்ளது.

அருள்நிறை துர்க்கேஸ்வரம் கணபதியை வழிபட்டு அருள்பெற நித்தமும் பக்தர்கள் துர்க்கேஸ்வரத்துக்கு வருகை தருகின்றனர். இவ்விழா டிசெம்பர் 28ம் திகதி புதன்கிழமை பூர்த்தியாகும்.

**1-1-2023 ஞாயிறு மாலை 5 மணிக்கு துர்க்கேஸ்வ்ரத்தில் "கனடா TMS" V.S.தெய்வேந்திரன் தலைமையில் கனடாக் கலைஞர் வழங்கும் பக்திப் பாமாலை**


உ
சிவமயம்

## ராமநாத இந்துமத கிரியாபீடம்

*திருமணம் - வீடு குடிபுகுதல் - ருது சாந்தி பூஜை - புண்யாகவாசனம் - 60ம் கல்யாணம் (சஷ்டியாப்த பூர்த்தி) - 31ம் நாள் துடக்கு கழித்தல் - வீட்டுக்கிருத்தியம் (திவசம்) - ஆட்டத்திவசம் - மாசியம் - சிரார்த்தம் - புரட்டாதி மாளையம - கணபதி ஹோமம் - லட்சுமி ஹோமம் - நவக்கிரக ஹோமம் - தோஷ நிவர்த்தி பூஜைகள் - சத்தியநாராயண பூஜை - வளைகாப்பு மற்றும் அனைத்து இந்துமத சேவைகளும் பெற்றுக்கொள்ளலாம்*

**இன்னும் பல ஆண்டுகளுக்கான பஞ்சாங்கத்தினை நாம் கணித்து வைத்திருப்பதனால் திருமண மண்டபங்களை முன்கூட்டியே ஒழுங்கு செய்ய முகூர்த்தங்களை நம்மிடம் கணித்துக் கொள்ளலாம்**

**வைபவங்களுக்கான மங்கள இசை ஏற்பாடும் செய்து தரப்படும்**

**647-927 1434 ராம்ஜி ஐயா 647-618 7755**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் வடமாகாண ஆளுநர் தலைமையில் விசேட கலந்துரையாடல்

மன்னார் மாவட்டத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் திங்கட்கிழமை (09) மதியம் மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, வடமாகாண பிரதம செயலாளர், மன்னார் மற்றும் வுனியா மாவட்டங்களை சேர்ந்த பிரதேச செயலகங் களின் பிரதேச செயலாளர்கள், பங்கு தந்தையர்கள், மாகாண சபை திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



கலந்துரையாடலில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் முக்கியமாக காணிப் பிரச்சினை தொடர்பாகவும் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ள காணிகள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.



இரண்டு மாவட்டங்களிலும் பிரதேச செயலாளர் களினால் தங்களது பிரதேசங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களது பிரதேசத்தில் செயல்படுத்தப்பட வேண்டிய மற்றும் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

உணவு பாதுகாப்பு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. உணவு உற்பத்தி சம்பந்தமாக பிரதேச செயலாளர்களூடாக உணவு உற்பத்தியை எவ்வாறு அதிகரிப்பது தொடர்பாகவும், உணவு உற்பத்தி போசாக்கு மட்டத்தினை மக்களிடையே உயர்த்துவதற்கான வழி முறைகளை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# அரச உத்தியோகத்தர்களை குரங்கு காவலுக்கு அமர்த்தும் பிரதேச செயலாளர்!



**ஈழமகன் - சுயாதீன ஊடகவியலாளர், முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில், பிரதேச செயலகத்தின் கீழுள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களாகிய தம்மை பிரதேச செயலாளர் குரங்கு காவலுக்கு அமர்த்துவதாக அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் இயற்கையான முறையில் செய்கை மேற்கொள்ளப்பட்ட விவசாய அறுவடை விழா கடந்த வருடம் புரட்டாதி மாதம் (17) இடம்பெற்றிருந்தது. அதற்கான அர்ப்பணிப்பு மிக்க சேவைகள் தொடர்பில் குறித்த பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்ட மாவட்ட செயலாளர் மாந்தை கிழக்கின் பிரதேச செயலக உத்தியோகத்தர்களை வாழ்த்தியிருந்தார்.

ஆனால் தற்போது ஒவ்வொரு நாளும் காலை 7 மணியளவில் பிரதேச செயலக வளாகத்துக்குள் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பகுதிக்கு வருகை தந்து 2 மணித்தியாலங்கள் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் குரங்கு காவல் இருக்கவேண்டும் என பிரதேச செயலாளர் பணித்துள்ளதாக தெரிவித்துள்ள உத்தியோகத்தர்கள், வெளி மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு பணி நாட்களிலும், குறித்த பகுதியை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு பணிநாட்கள் தவிர்ந்த விடுமுறை நாட்களிலும் குரங்கு காவல் இருப்பதாக தெரிவித்த உத்தியோகத்தர்கள் காலை 7 மணியில் இருந்து மாலை 6 மணி வரை தாம் ஒவ்வொருவரும் 2 மணித்தியாலங்கள் குரங்கு காவல் இருக்கவேண்டி உள்ளது எனவும் இது தொடர்பில் தாம் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகியிருப்பதாவும் தெரிவித்துள்ளனர்.

தாம் பட்டப்படிப்பினை முடித்து விட்டு குரங்கு காவல் இருப்பதாக எமது செய்தி சேவைக்கு கவலையுடன் தெரிவித்த ஆண் உத்தியோகத்தர்கள், தம்மை விட பெண் உத்தியோகத்தர்கள் நிலைமை மிக மிக மோசம் என கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த பெண் உத்தியோகத்தர்கள், காலை 7 மணிக்கு குரங்கு காவலை பொறுப்பேற்க வேண்டும் என்ற நிலைமை இருக்கும் போது, தமது சிறு பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதா, அல்லது தமது குடும்ப தலைவர்களுக்கு சமைத்து வைப்பதா, அல்லது குரங்கு காவலுக்கு வருவதா என்ற தர்மசங்கடமான நிலைமை உருவாகின்றது என்று தெரிவித்த அவர்கள், தமது பிள்ளைகளின் பாடசாலை எதிர்காலம் கேள்விகுறியாகுவதற்கும், மற்றும் தமது குடும்ப வாழ்க்கை பிரச்சனைகளுக்கு ஒரு ஆரம்ப புள்ளியாக இந்த குரங்கு காவல் இருப்பதாகவும் தெரிவித்த அவர்கள், மாந்தை கிழக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்களை மீட்க இன்னொரு மீட்பர் இல்லையா என தாம் அங்கலாய்ப்பதாகவும் தெரிவித்தனர்.

# இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா மன்னாரில் உள்ள ஆதரவாளர்களுடன் சந்திப்பு



இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் கிளைக்கு வியாழக்கிழமை (12) மாலை விஜயம் செய்த இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தமிழரசுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்களுடன் சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது. குறித்த கலந்துரையாடலை தொடர்ந்து ஊடக சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், இடம்பெற உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எங்களின் நிலைப்பாடு,மக்களின் பொறுப்பு தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்டோம்.இத்தேர்தல் பல அரசியல் அமைப்பு திருத்தங்களோடும் தேர்தல் திருத்தங்களோடு இடம் பெற வேண்டும்.

இத்தேர்தல் ஏறகனவே உள்ள நடைமுறையோடு,மக்கள் மத்தியில் பல குறைபாடுகள், ஆட்சி நடத்த முடியாத நிலை, வரவு செலவு திட்டத்தை நிறைவேற்ற முடியாத அளவிற்கு ஆளும் தரப்பு, எதிர் தரப்பு என்ற வகையில், ஆளும் தரப்பில் வெற்றி பெற்றிருந்தது பதவியை பெற்றிருந்தாலும் எதிர் தரப்பில் இருக்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதால் இந்த ஆட்சியை நடாத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு வந்தது.

இதில் இன்னும் மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என அரசாங்கம் கூறிய போதும் அதற்கான திருத்தங்கள் இன்னும் கொண்டு வரவில்லை.

தமிழரசுக்கட்சியை பொறுத்தவரையில், அவர்களுடைய செயற்குழுவில் பல வகையான கேள்விகள் எழுப்பப்பட்டு, சாதக பாதகங்கள் விவாதிக்கப்பட்டு இறுதியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு முன்னால் அந்த செயற் குழுவில் வரைந்த மாதிரி ஒரு சிபாரிசை நாங்கள் வரைந்து இருக்கின்றோம்.

ஏற்கனவே பெற்ற பெறுமானங்களின் அடிப்படையில் அதை வைத்து ஆட்சியை நடத்த முடியாத அடிப்படையில் தேசிய கூட்டமைப்பு பல வெற்றிகளை பெற்றிருந்த போதும் அந்த அனுபவங்களை பெற்றிருந்த போதிலும் இப்பொழுது தமிழரசுக்கட்சியின் சிபாரிசு ஒரு புதிய நடைமுறை வெற்றியை பெற்றுக்கொள்வதற்கான, கூடிய ஆசனங்களை பெற்றுக் கொள்வதற்கான ஒரு நடைமுறை பற்றி பிரேரிக்கப்பட்டுள்ளது.




இது பற்றி நாங்கள் தமிழரசுக் கட்சிக்கு வெளியில் நிற்கின்ற தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற புளொட், ரெலோ கட்சிகளுடன் தமிழரசுக் கட்சியின் சிபாரிசுக்கு பின்னர் நாங்கள் விவாதித்து இருக்கின்றோம், என அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# அரசாங்கத்தை மன்னிக்கக்கூடாது என்கிறார் எல்லே குணவங்ச தேரர்



நாட்டை 74 ஆண்டுகள் ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் ஊழல், மோசடிகள், முறைகேடுகள் மற்றும் மின்சார கட்டணத்தை அடிக்கடி அதிகரித்து மக்கள் மீது சுமையை ஏற்றும் தற்போதைய அரசாங்கத்திற்கு எவ்வித மன்னிப்பையும் வழங்கக்கூடாது என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார். யானைக்கு ஒரு காலம் வந்தால், பூனைக்கும் ஒரு காலம் வரும்.

தற்போது பூனைக்கு காலம் வந்துள்ளது. இதனால், அதை தவற விடக்கூடாது. எதிர்வரும் தேர்தலில் மக்கள் இதனை வெளிக்காட்ட வேண்டும். அது நாட்டின் எதிர் காலத்திற்கு மிகவும் முக்கியமானது.

மின்சக்தி அமைச்சருக்கு மக்கள் மீது அக்கறையில்லை.

தற்போது தேர்தல் வருகிறது. மக்கள் எப்போதும் ஏமாற மாட்டார்கள். தேர்தலில் அரசாங்கத்திற்கு மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள் என எல்லே குணவங்ச தேரர் கூறியுள்ளார்.

# Ranil's Ambition Punctured by TNA's Disappointment

By Siva Parameswaran - Senior International Journalist, London



A week's time is too long in politics.

The ambitious dream of President Ranil Wickremesinghe to find a solution to the decades long ethnic issue might become a damp squib(d) as the main Tamil party - the Tamil National Alliance (TNA) has expressed its deep disappointment over some of its preconditions not being met.

Led by veteran parliamentarian R. Sampanthan the TNA may abruptly end its talk with the president if there is no progress in what the government calls reconciliation efforts. TNA has demanded returning of lands still forcefully occupied by the security forces, in particular the army and the release of political prisoners as a precondition for the talks to proceed further.

TNA spokesperson and Jaffna district MP Sumanthiran told the media after the initial meeting that a note has been given to the government outlining their stand and precondition for the talks.

"After the last meeting returning of lands and releasing of political prisoners were scheduled to be discussed in the meeting earlier this month. Unfortunately, there is no development in that so far".

Disappointment of the TNA and the future of the talks itself being in limbo is clearly visible.

The army has usurped huge tracts of land to create camps under various 'Headquarters Brigade' which includes private, state, and department lands. Although most of the lands in the Jaffna peninsula have been released by the army and returned back to the public, certain pockets of most fertile lands albeit comparatively small in area, are still under the control of the Sri Lankan Army.



Even on the day the initial talks were held with the President public in the North staged a strong unified protest and stopped further land grabbing attempts.

TNA has been consistently insisting on the full implementation of the 13th amendment in spite of making its stand clear that it can just be the basis for further devolution of power and not a solution by itself. Other Tamil parties too echo similarly. For the talks to continue TNA is particular about concrete action on land return and the release of political prisoners. The delay in both has been a major issue since the end of the bloody war.

A journey from Mullaitivu to Jaffna via Killinochi is ample proof of the widespread Military and Naval camps along the traditional Tamil homeland.

The non-return of land coupled with further land grabbing has badly affected the livelihood of tens of thousands of people in the Vanni area.



Sumanthiran further said the TNA would be handing over a note on how to proceed beyond the 13th amendment, meaningful devolution of power, and putting into place a truly federal system.

The Tamils in the North and East want their traditional homeland to be a united single province for devolution of power.

Land powers to the provincial councils as envisaged in the Indo-Lanka accord if devolved in full would ensure complete control of the land area rests with the elected Provincial Councils which in turn would ensure private lands being returned to their rightful owners, while government and department lands are used for the designated purpose and stop further land grabbing.

TNA is very particular about these two things, Sumanthiran reiterated.

"We were told that those two things would be taken forward in the meeting on the 10th. The government side has put forward various reasons for this. They say some more formalities are yet to be completed in this regard. So, nothing has moved forward in those aspects. We need to see developments by the 10th of January".

As expected, nothing tangible was put forward in the meeting on the 10th. And now a 'grace period' of a week-till the 17th has been granted for the President to sort out things failing which it could be 'do or die' for him in potentially putting forward an 'acceptable political solution'.




President Ranil Wickremesinghe has planned to visit Jaffna on the 15th in connection with Thai Pongal and the Tamils hope he would announce returning the private lands under the control of the army. And his decision either wise is considered crucial to the talks between the government and the TNA.

"The president has said when he visits Jaffna on the 15th he will come to an understanding with the army. We will make our position clear on the meeting to be held on the 10th and the decisions taken on that date will decide if the talks will go forward or not".

As Sri Lanka celebrates its 75th Independence Day on 4th February, President Wickremesinghe has repeatedly said in recent times that he would like to resolve pending issues including the vital solution to the long-time ethnic issue.

Political analysts say Ranil Wickremesinghe would like to leave a legacy and claim credit for finding a solution to the ethnic issue during his tenure as President which may be his last in Public Office.

Earlier this month, in what was described as a courtesy call former President and leader of the Sri Lanka Podujana Peramuna Mahinda Rajapaksa met ailing TNA leader Sampanthan at his home. During this meeting, it is understood Mahinda Rajapaksa assured Sampanthan that his party would wholeheartedly support any political solution.

President Ranil Wickremesinghe survives in office based on the support offered by Mahinda's party. Subtly but equally the Sri Lankan Military has




a say in returning the lands to the individuals.

If the President is unable to use his executive powers and the powers as the Commander-in-Chief of the armed forces in forcing the military to return the lands within a timeframe and assure the TNA and the other Tamil Parties as well as the Tamils, his ambitious plans of finding a solution the national ethnic question is bound to be derailed.

This is amply clear in a tweet by Sumanthiran recently following the invitation from the President for the talks.

"We will engage constructively in every sincere attempt as we have always done but will not allow any farcical process".

Whether the talks go forward or not depends on President Wickremesinghe's reply to the two vital questions put forward by the TNA.

It's also an acid test for his leadership.

**TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE**

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Achos, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# Sapphire Banquet & Catering

---------------------------


**Specializing in Videography & Photography**

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Religious Ceremonies
- Wedding Showers

**SHIVA SUBRAMANIAM**
**(647) 406-4868**

# தமிழ் அரசியலின் சீரழிவு?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



ஏற்கனவே பல துண்டுகளாக சிதறி கிடக்கும் ஈழத் தமிழ் அரசியல் பரப்பில் மீண்டும் ஒரு உடைவு ஏற்பட்டிருக்கிறது. எனினும் அது புதிய இணைவுகளுக்கான ஒரு உடைவா என்பதனை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெருமளவுக்கு உடையும் நிலைமைகள் தெரிகின்றன. தமிழரசு கட்சி தன்னுடைய சின்னத்தில் தமிழரசு கட்சியாகவே எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிடக் கூடிய நிலைமைகள் காணப்படுகின்றன. அதனால் பங்காளி கட்சிகள் வெளியே விடப்பட்டிருக்கின்றன. இந்த விடயத்தில் தமிழரசு கட்சியின் முடிவுதான் கூட்டமைப்பின் தலைவராகிய சம்பந்தரின் முடிவுமாக இருந்தால், இதுவரையிலும் இருந்து வந்த கூட்டமைப்பு என்ற கூட்டு கலைகிறது. அடுத்த கட்டமாக ஒரு புதிய கூட்டமைப்பு உருவாகலாம் என்று தெரிகிறது. ஏற்கனவே விக்னேஸ்வரனின் கூட்டுக்குள் காணப்படும் பங்காளிக் கட்சிகள் மணிவண்ணன் உட்பட எல்லா தரப்புகளையும் ஒன்றிணைத்து அதை கூட்டமைப்பு என்ற பெயரில் பதியக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பங்காளிக் கட்சிகள் தொடர்ச்சியாக கூட்டமைப்புக்குள் அவமதிக்கப்பட்டு வந்தன. தமிழரசுக் கட்சி பங்காளிக் கட்சிகளை மதிக்கவில்லை. ஆயுதப் போராட்ட மரபில் வந்த மேற்படி கட்சிகளை சுமந்திரன் தொடர்ச்சியாக அவமதித்து வந்தார். “தமிழரசு கட்சி என்னும் மராமரத்தைச் சுற்றித்தான் பங்காளிக் கட்சிகள் என்னும் கொடிகள் அதன் சத்தைப் போஷித்து படருகின்றன. மரத்தை அழிக்க நினைத்தால்? கொடிகள் காணாமல் போகும். தற்கொலைகள் வேண்டாமே” என்று முகநூலில் கிழக்கைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியனேந்திரன் எழுதுகிறார்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசியலின் வலுச்சமநிலையில் மாற்றம் ஏற்பட்டது. கூட்டமைப்பு அதன் ஏக போகத்தை இழந்தது. கூட்டமைப்புக்குள் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாகிய டெலோவுக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்தன. இதனால் டெலோ அதன் குரலை உயர்த்தி கதைக்க தொடங்கியது. ஏட்டிக்கு போட்டியாக தமிழரசு கட்சியும் பங்காளிக் கட்சிகளும் கருத்துக்களை தெரிவித்து வந்தன. கடந்த ஆண்டு ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிட்டு டெலோ இயக்கத்தின் முன்னெடுப்பில் பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து நீங்கிய கட்சிகளோடு இணைந்து செயல்படத் தொடங்கின. ஐநாவுக்கு கடிதம் எழுதுவது, இந்தியாவுக்கு கடிதம் எழுதுவது போன்ற விடயங்களில் இக்கட்சிகள் தங்களுக்கு இடையே ஒருங்கிணைந்து செயல்பட்டன.

இந்த ஒருங்கிணைப்பு இனிவருங்காலங்களில் ஒரு பலமான கட்சிக் கூட்டாக உருவாக முடியும். அதை அவர்கள் கூட்டமைப்பு என்ற பெயரில் பதிவதற்கு முயற்சிப்பதாகவும் செய்திகள் வெளிவந்தன. ஆனால் அக்கூட்டுக்கு விக்னேஸ்வரன் பொருத்தமான தலைமைத்துவத்தை வழங்குவாரா? அவர் தன்னுடைய சொந்தக் கட்சியையே கட்டிறுக்கமான ஒரு கட்சியாக கட்டியெழுப்புவதாக தெரியவில்லை. இந்நிலையில் பலமான தமிழரசு கட்சிக்கு எதிராக ஒரு மாற்றுத் தலைமையை வழங்க அவரால் முடியுமா?

கடந்த வாரம் தமிழரசு கட்சி தனித்துச் செல்வது என்று முடிவு எடுத்த அதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஒரு சந்திப்பு இடம் பெற்றது. முன்னாள் யாழ் மாநகர சபை முதல்வர் மணிவண்ணன் விக்னேஸ்வரனை சந்தித்துள்ளார். அவர் விக்னேஸ்வரனின் கட்சிக்குள் இணைவாராக இருந்தால் பெரும்பாலும் அடுத்த யாழ் நகர முதல்வராக அவரே மீண்டும் தெரிவு செய்யப்படும் வாய்ப்புகள் தெரிகின்றன.

அண்மையில் அவர் வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்டதையடுத்து தனது பதவியை ராஜினாமாச் செய்தார். வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாவது வாக்கெடுப்பு இனிமேல்தான் நடக்கும். அதில் டெலோவும் புளட்டும் மணிவண்ணனை ஆதரித்தால் அவர்தான் அடுத்த முதல்வர். அவ்வாறு விக்னேஸ்வரனின் கூட்டுக்குள் மணிவண்ணன் இணைந்து அதன் மூலம் மீண்டும் யாழ் நகர முதல்வராக அவர் தெரிவு செய்யப்படுவாராக இருந்தால், அது நிச்சயமாக தமிழ் அரசியலில் ஒரு புதிய கூட்டுக்கான உற்சாகமூட்டும் தொடக்கமாக அமையும். விக்னேஸ்வரனின் தலைமையில் உருவாகக்கூடிய ஒரு கூட்டின் பிரகாசமான முதல் அடி வைப்பாக அது அமைய முடியும். யாழ் மாநகர சபை என்பது நாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் அதிகம் கவர்ச்சி மிக்க மாநகர சபைகளில் ஒன்று. தமிழ் அரசியலைப் பொறுத்தவரை அது ஒரு கேந்திர ஸ்தானம். கூட்டமைப்பு உடைந்த பின் உருவாகக்கூடிய புதிய கூட்டின் முதலாவது வெற்றி அங்கே கிடைக்குமாக இருந்தால், அது அந்த கூட்டுக்கு கவர்ச்சியான ஒரு தொடக்கமாக அமையும்.

நிச்சயமாக அது தமிழரசுக் கட்சிக்கு புதிய சவால்களைக் கொண்டு வரும். தமிழரசுக் கட்சி தனித்து நின்று தேர்தலில் தன் பலத்தை நிரூபிக்க வேண்டியிருக்கும். கடந்த பொது தேர்தலில் தமிழரசு கட்சியின் பல பிரதானிகள் தோற்கடிக்கப்பட்டார்கள். அக்கட்சியின் தலைவரும் செயலாளரும் தோற்றுப் போனார்கள். இந்நிலையில் ஒரு புதிய கூட்டு உருவகுமாக இருந்தால் அது ஒரு பெரும் கூட்டாக தன்னைக் கட்டியெழுப்புமாக இருந்தால் நிச்சயமாக அது தமிழரசு கட்சிக்கு தலையிடிதான்.

2009க்குப்பின் தமிழரசியலில் ஒரு மாயை நிலவியது. கூட்டமைப்பில் இருந்து விலகிச் சென்றவர்கள் வெற்றி பெற முடியாது என்பதே அந்த மாயை. ஆனால், அந்த மாயையை கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் விக்னேஸ்வரனும் வியாழேந்திரனும் உடைத்தெறிந்து விட்டார்கள். எனினும் கூட்டமைப்புக்குள் பங்காளிகளாக இருந்த டெலோவும் புளட்டும் தமக்கு ஏற்பட்ட எல்லா அவமானங்களையும் தாங்கிக்கொண்டு கட்சிக்குள்ளேயே இருந்தன. வீட்டு சின்னத்தை விட்டு வெளியேறினால் அவர்கள் தோற்றுப் போய் விடுவார்கள் என்று தமிழரசுக் கட்சி இப்பொழுதும் நம்புகின்றது. கடந்த பொதுத்தேர்தல் அந்த நம்பிக்கையை அவமானகரமான விதத்தில் தோற்கடித்து விட்டது. இனிவரும் தேர்தல்களில் மேற்படி இரண்டு கட்சிகளும் தமது பலத்தை நிரூபிக்க வேண்டி இருக்கும்.

இப்படிப் பார்த்தால் கூட்டமைப்பு உடைந்திருப்பது தமிழ் அரசியலில் ஒரு புதிய பல்வகைமையை ஏற்படுத்தும். ஆனால் அதேசமயம் அது வாக்குகள் சிதறடிக்கப்படும் ஆபத்தையும் தோற்றுவிக்கும்.

கடந்த 13 ஆண்டு காலத்தில் குறிப்பாக கடந்த பொதுத் தேர்தல் வரையிலும் தமிழரசு கட்சியின் அரசியல் முதன்மை எனப்படுவது எதையுமே பெற்று தரவில்லை. தமிழ் மக்கள் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டிருப்பதற்கு அல்லது கடந்த 13 ஆண்டுகளில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய வெற்றி எதையும் பெறாததற்கு அது ஒரு காரணம். அதனால்தான் கடந்த பொதுத் தேர்தலையொட்டி ஒரு புதிய மாற்று அணியை உருவாக்க குடிமக்கள் சமூகங்களும் செயற்பாட்டாளர்களும் ஆர்வலர்களும் முயற்சித்தார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக மாற்று அணியை ஒருங்கிணைக்க முடியவில்லை. அதற்கு விக்னேஸ்வரனும் பொறுப்பு; கஜேந்திரக்குமாரும் பொறுப்பு; தமிழ் மக்கள் பேரவையும் பொறுப்பு. எனினும் இவர்கள் எல்லாரும் தமிழ் அரசியலை நொதிக்க செய்ததன் விளைவாகவே கூட்டமைப்பு அதன் ஏகபோகத்தை இழந்தது. அதேசமயம் மாற்று அணியை பலப்படுத்த முடியாத காரணத்தால் கூட்டமைப்பு இழந்த வாக்குகளில் மூன்றை அரசுக்கு ஆதரவான கட்சிகள் வென்றன.

இனிமேலும் அந்த ஆபத்து உண்டு. தமிழரசுக் கட்சிக்கு மாற்றாக ஒரு பலமான ஐக்கியத்தை கட்டியெழுப்ப தவறினால் தமிழரசு கட்சியும் பெரு வெற்றி பெறாது. மாற்று அணியும் பெரு வெற்றி பெறாது. தமிழ் வாக்குகள் சிதறும்.

இதனால், ஜனநாயக போராளிகள் கட்சி தமிழ் தேசிய பசுமை இயக்கம் போன்ற கட்சிகளையும் அமைப்புகளையும் இணைத்து ஒரு கூட்டினை கட்டியெழுப்ப வேண்டிய தேவை தமிழரசு கட்சிக்கு வெளியே உள்ள கட்சிகளுக்கு உண்டு. அதை அவர்கள் வெற்றிகரமாக செய்யவில்லையென்றால் தமிழ் வாக்குகள் சிதறும். அப்படிச் சிதறும்போது “மீன் கரைந்தாலும் குழம்புக்குள்தான் இருக்கிறது” என்று கூற முடியாது என்பதனை கடந்த பொதுத் தேர்தல் நிரூபித்திருக்கிறது.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் தமிழரசு கட்சியின் முடிவுகளால் ஒரு புதிய ஒருங்கிணைப்புக்கான வாய்ப்புகள் திறந்து விடப்பட்டுள்ளன. அதேசமயம் இந்த மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் காலம் எதுவென்று பார்த்தால், தமிழ் அரசியலின் சீரழிவை விளங்கிக் கொள்ளவும் முடியும். ஒரு பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கும் பின்னணியில் கட்சிகள் புதிய சேர்க்கைகளைப் பற்றி சிந்திக்கும் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்த்தரப்பு ஒற்றுமையாக இல்லை, ஒரு குரலில் பேசுவதில்லை என்று வெளிநாட்டுத் தூதரகங்கள் மட்டுமல்ல கொழும்பில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளும் கூறி வருகிறார்கள். அப்படிப்பட்டது ஒரு பின்னணியில் பேச்சுவார்த்தைக் காலத்தில் தமிழ்த் தரப்பில் உள்ள பெரிய கட்சியானது இப்படி ஒரு முடிவை எடுத்திருக்கிறது. இது எதிர்த் தரப்பு தமிழர்களை நோக்கி பரிகசிக்கும் ஒருநிலையை ஏற்படுத்தும். தமிழ்த்தரப்பை உதிரிகளாகப் பிரித்துக் கையாள முடியும் என்று நம்பும் சக்திகளை உற்சாகப்படுத்தும்.

### வீணாவின் கவிக்கணை

வளரும் தேயும்
பிறை போல வாழ்க்கை,
வலியோ வேதனையோ
இன்பமோ சந்தோஷமோ
எதுவுமே
நிரந்தரம் இல்லாதது
நம் வாழ்க்கை,
மனதில் உறுதியும்
எதையும் தாங்கும்
உள்ளமும் இருந்தால்
வாழும் காலம் இனிதே
அமைந்திடும் நிம்மதியாய்,
வாழ்க வளமுடன்



சிவமயம்



# புவனேஸ்வரி அம்மன் கோவில்

(230 Wilkinson Road, Brampton, ON)



# சனிப் பெயர்ச்சி மகாயாகம்

சனிப்பெயர்ச்சி திருக்கணித பஞ்சாங்கப்படி (17.01.2023) நிகழவுள்ளது.

நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் தைமாதம் (21.01.2023) சனிக்கிழமையும ்அமாவாசையும் கூடிய சுபதினத்தில் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு சனிஸ்வரபகவானுக்கு காலை 10 மணி முதல் மதியம் 01 மணி வரை மிகவும் சிறப்பாக மகாயாகம் நடைபெற உள்ளது. இதில் மெய்யன்பர்கள் கலந்துகொண்டு சனிபகவானின் அருள்கடாட்சத்தை பெற்றுயுய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மகாயாகம் ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ளது**

## மகாயாகத்தை நடத்திவைப்பவர்

**பிரதான குருக்கள் 'சர்வசாதகம்' சிவஸ்ரீ**
**M. முருகன் சிவாச்சாரியார் B.A. (தமிழ்நாடு, இந்தியா)**

**பிரதான உபயம்- திரு. ராம்குமார் குடும்பம்**

## பரிகாரம் செய்ய வேண்டிய ராசிகள்

**கடகம், சிம்மம், கன்னி, விருச்சிகம்**
**மகரம், கும்பம், மீனம்**

### இதில் கலந்துகொள்வதால் உண்டாகும் பலன்கள்

-நோய், கடன், வம்பு வழக்குகள் விலகும். -தீராதபிரச்சனைகள், மரணபயம் விலகும்.
-தொழில் விருத்தி அடையும். -வீண்விரயங்கள் கட்டுக்குள் வரும், கர்மவினை குறையும்.

இதில் கலந்துகொள்பவர்கள் 416-721-0532 என்ற தொலைபேசி இலக்கத்தில் அழைத்து முன்பதிவு செய்துகொள்ளவும்.

அனைவரையும் வருக வருக என அன்போடு அழைக்கின்றோம்.

சர்வசாதகம். சிவஸ்ரீ. M. முருகன் சிவாச்சாரியார்
ஸ்ரீ குரு. S.K பிரதாப் (ALP ஜோதிடர்)

# தமிழீழ விடுதலைப் புலிகளின் நாட்களை மீட்டுப் பார்க்கும் தமிழ் மக்கள்!



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

• சிங்கள - தமிழ் அரசியல்வாதிகளுக்கு தமிழர் விவகாரம் - "பிச்சைக்காரன் புண்"

• தமிழரசுக் கட்சி தனி வழி போவதால் சாதிக்கப் போவது என்ன?

• தீர்வை நோக்கி தமிழ்த் தலைமைகள் பயணிக்கின்றனரா?

2009இல் போர் மௌனிக்கப்பட்ட பின் கடந்த 14 வருட கால வரலாறு தமிழ்த் தலைமைகளின் பொறுப்பற்ற தன்மை ஒற்றுமை இன்மை தமிழ்த் தலைமைகளிடையே நிலவுகின்ற நாடாளுமன்ற மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான நாற்காலிகளுக்காக நடைபெறும் போட்டா போட்டி என்பன தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த பழைய நினைவுகளை மக்கள் மீட்டுப் பார்க்கும் நிலைக்கு தள்ளியுள்ளது.

• தென்னிலங்கை அரசியல் சக்திகளின் "திருந்தாத போக்கு"

மறுபுறம் தென்னிலங்கையின் அரசியல் சக்திகளின் "திருந்தாத போக்கு" என்பனவும் தமிழீழ விடுதலைப் புலிகள்குறித்த ஞாபகங்களை மீட்டுப் பார்க்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது. இதுபற்றி ஒரு சில அரசியல்வாதிகளும் மக்களும் ஊடகங்களின் முன் வெளிப்படையாகவே கருத்துக்களை முன் வைத்து வருவதையும் காணக் கூடியதாக உள்ளது.

சுதந்திர இலங்கையில் தமிழ் மக்களின் வரலாறு பெரும்பாலும் போராட்டக்களத்திலேயே கரைந்து போயிற்று.காலச் சூழ்நிலை தென்னிலங்கை அரசியல் சக்திகளின் வெற்றிகரமான இராஜதந்திர காய் நகர்த்தல்கள் தமிழ்த் தலைமைகளின் தூரநோக்கற்ற அரசியல் பார்வை தமிழ் இனத்துக்குள்ளேயே கிளைவிட்டு வளர்ந்த துரோகத்தனங்கள் காட்டிக் கொடுப்புகள் என்பன தமிழர் போராட்டத்தின் வெற்றி இலக்கை நோக்கிய பயணத்தை திசைமாற்றிவிட்டன.

இதற்கும் அப்பால் தென்னாசிய மற்றும் உலக புவிசார் அரசியலின் தாக்கங்கள் 2001 செப்டம்பர் 11 உலக வர்த்த மையம் மீதான தாக்குதலையடுத்து பயங்கரவாதத்தை மையப்படுத்தி கட்டி எழுப்பப்பட்ட உலக ஒருங்கமைப்பு என்பன தமிழர் போராட்டத்தை புரட்டிப்போட்டுள்ளது என்பதை யாவரும் அறிவர்.

எனினும் வடக்குக் கிழக்கில் தமிழ்ச் சமூகத்தின் சமூகக் கட்டமைப்பு பாதுகாக்கப்பட்டே வந்தது என்பதை மறுப்பதற்கில்லை. திட்டமிடப்பட்டு போதையில் மூழ்கடிக்கப்படும் தமிழ்ச் சமூகம் கலாசார சீர்கேடு திசைமாறிப் போகும் இளைய சமூகம் பெற்றோரே மனதைக் கல்லாக்கி தமது பிள்ளைகளை பொலிசாரிடம் கையளிக்கும் அவலம் போன்ற பல சமூக சீர்கேடுகளை விடுதலைப் புலிகளின் காலத்தில் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்ற நிலை இருந்ததை மக்களை சிந்திக்க வைத்துள்ளது.

தமிழர் விவகாரத்தில் தீர்வை நோக்கிய பயணத்தில் மாத்திரமல்ல தமிழ்ச் சமூகம் காலம் காலமாகக் கட்டிக் காத்து வந்த சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பு என்பன சிதைக்கப்பட்டு சீரலிக்கப்பட்டு திசைமாறிப் போவதையும் தமிழ் தலைமைகள் குறிப்பாக 2009 இல் போர் மௌனிக்கப்பட்ட பின் வரலாற்றுப் பாடங்களை கற்கவில்லையா அல்லது தெரிந்தும் தெரியாதது போல் பாசாங்கு அரசியல் செய்கின்றனரா? ஏன்ற கேள்வி எழும்புகின்றது.

2009 இல் போர் மௌனிக்கப்பட்டதன் பின் தமிழ்த் தலைமைகளின் வரலாறு குறிப்பாக செயற்பாடுகள் மேற் கூறியது போன்ற பல்வேறு கேள்விகளை எழுப்பி நிற்கின்றன.

அதே வேளையில் 2009க்குப் பின் உண்மையிலேயே தமிழர் விவகாரத்துக்கான தீர்வை நோக்கி தமிழ்த் தலைமைகள் பயணிக்கின்றனரா என்ற கேள்வியும் எழும்பாமலும் இல்லை. தீபாவளிக்கு தீர்வு பொங்கலுக்கு தீர்வு புத்தாண்டுக்குத் தீர்வு என பல தீர்வுகளை தமிழ்த் தலைமைகள் கடந்த காலங்களில் வழங்கியதை தமிழ் மக்கள் மறப்பதற்கில்லை.

மொத்தத்தில் தமிழ்த் தலைமைகள் சமூகநலன் சமூகப் பொறுப்பு தமிழ்மக்களின் அரசியல் பயணம் என்ற சிந்தனைகளுக்கு அப்பால் நாற்காலிகளுக்கான அரசியலிலேயே தமது முழுக் கவனத்தையும் குவித்து வைத்தள்ளமையானது தமிழ் மக்கள் தமது தலைவிதியை தாமே தீர்மானித்தாக வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர் என்பதையே காட்டுகின்றது.

அதுமாத்திரமல்ல யாழ் மாநகர சபை உற்பட பல்வேறு பிரதேச சபைகளையே ஒன்றுபட்டு ஒற்றுமையாக நடத்த முன் வராதவர்கள் தமிழ்மக்களுக்குத் தலைமை ஏற்க தகுதியானவர்களா என்ற கேள்வியையும் தமிழ் மக்கள் இன்று பரவலாக முன் வைக்கத் தொடங்கியுள்ளனர்.

• தமிழ்த் தேசிய கூட்டமைப்பே பொறுப்புக் கூற வேண்டும்

2009க்குப் பிற்பட்ட தமிழர் அரசியலின் இன்றைய இந்த நிலைமைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பே பொறுப்புக் கூற வேண்டும். போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழர் அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஏகபோக பாத்திரத்தை வகித்தது. கடந்த 14 வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியலே பேசு பொருளாக இருந்தது. எனினும் தமிழர் விவகாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஒரு அங்குலம்தானும் நகர முடியவில்லை என்பதுதான் உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தத் தோல்விக்கான முழுப் பொறுப்பையும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற தமிழரசுக்கட்சியும் அக் கட்சியைச் சார்ந்த முக்கியஸ்தர்களே கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளதுமே இதற்குக் காரணமாகும். தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்களே கூட்டமைப்பையும் பொறுப்பெடுத்தமையானது கூட்டமைப்பின் பெயரில் தமிழரசுக் கட்சியை வளர்த்தெடுப்பதிலேயே கடந்த 12 வருடங்களையும் செலவழித்துள்ளனர்என்பதே உண்மையாகும்.

அந்தவகையில் தமிழரசுக் கட்சியின் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்களின் அரசியல் காவலனாக வளர்த்தெடுப்பதில் காட்ட வேண்டிய கடப்பாட்டை புறந்தள்ளி தமிழரசுக் கட்சியை வளர்த்தெடுப்பதிலேயே கூடுதல் கவனம் செலுத்தினர். இது தமிழ்த் தலைமைகளின் கூட்டுப் பொறுப்புக்களுக்கப்பால் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை பலப்படுத்துவதாகவே அமைந்தது.

இதுபற்றி இப் பத்தியாளர் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக தனது பத்தியில் வலியுறுத்தி வருவதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும் தொடர்ச்சியாக முன் வைத்து வந்துள்ளார் என்பதையும் இங்கு பதிவு செய்கின்றோம்.

• கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென கூட்டமைப்பில் இருந்து குரல் எழும்பியுள்ளது. குறிப்பாக இந்தக் குரல் தமிழரசுக் கட்சியில் இருந்து எழுந்துள்ளது. தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

இதுவரை காலமும் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக இருக்கும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏணைய கட்சிகளே இந்தக் கோரிக்கையினை கடந்த காலங்களில் முன் வைத்தன. தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு வெளியில் தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற சக்திகளும் இந்தக் கோரிக்கையினை தொடர்ச்சியாக முன்வைத்தன.

ஆனால் கூட்டமைப்பின் தலைமையும் தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவதை தவிர்த்தும் வந்தனர். இறுதியில் இந்தக் கோரிக்கையை முன் வைத்த கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் பல வெளியேறின அல்லது வெளியேற்றப்பட்டனர். அதைப்பற்றி எல்லாம் கணக்கில் எடுக்காத தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கூடாக தமிழரசுக் கட்சியின் அரசியலை முன்னெடுப்பதிலும் பலப்படுத்திக் கொள்வதிலும் தனது முழுக் கவனத்தையும் செலுத்தியது.

• தமிழ் மக்கள் கூட்டமைப்பின் மீது வைத்திருந்த நம்பிக்கை தகர்ந்தது

அதுமாத்திரமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி பல சந்தர்ப்பங்களில் கூட்டமைப்பிற்குள் Big Brother பாணியில் ஆட்சி நடத்தியது. இதன்மூலம் தமிழரசுக் கட்சி பெரிதாக ஒன்றையும் பெற்றுக் கொள்ளவில்லை. இறுதியில் கூட்டமைப்பை சிதைத்ததாகவும் தமிழ் மக்கள் கூட்டமைப்பின் மீது வைத்திருந்த நம்பிக்கையை தகர்ப்பதுமாகவே அமைந்தது.

தற்போதும்கூட பிரதேச சபைகளுக்கான தேர்தல் மற்றும் தேர்தல்களை தமிழ்க் கட்சிகள் கூட்டாக எதிர் கொள்ள வேண்டுமென கோரிக்கைகள் எழுந்தபோது தமிழரசுக் கட்சியின் பொலிட்பீரோ கூடி அதற்கெதிராக தீர்மானம் நிறைவேற்றியதாக செய்திகள் வெளிவந்தன. தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா கூட்டமைப்பில் ஏணைய தமிழ்க் கட்சிகள் இணைவதை எவரும் தடுக்க இயலாது என அறிக்கைவிடுத்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாக பதிவு செய்ய வேண்டும் அதற்கென சின்னம் யாப்பு உருவாக்கப்பட வேண்டும் ஏணைய தமிழ்க் கட்சிகளையும் இணைத்து பயணிக்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசா குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளார்.

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு முஸ்லிம் கட்சிகளும் அமைப்பக்களும் ஓரணியில் தேர்தலுக்கு முகம் கொடுப்பது குறித்த அழைப்பை விடுத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

• ஓட்டியும் வெட்டியும் ஓடி கண்ணாமூச்சி காட்டுவதேன்?

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழர் விவகாரம் குறித்து தீர்வு காண்பதற்கென அழைப்புவிடுத்தபோது ஏனைய தமிழ்த் தலைவர்களுடன் முதல் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழரசுக் கட்சி பிறகு தனித்து ஜனாதிபதியைச் சந்தித்தது. தற்போதுமகூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மாத்திரம் பேச்சு வார்த்தைக்கு அழைத்து பேசியுள்ளார். பேச்சுவார்த்தையின் முடிவில் பேச்சு வார்த்தை வெற்றியளிக்கவில்லை என ஜனாதிபதிசட்டத்தரணியும் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு வார்த்தை என்ற போர்வையில் ஏணைய தமிழ்த் தலைமைகளுடன் ஓட்டியும் வெட்டியும் ஓடி கண்ணாமூச்சி காட்டுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

• தமிழரசுக் கட்சி தனி வழி போகவே முயல்கின்றது.

ஒற்றுமைப்பட வேண்டிய இன்றைய நிலையிலும் தமிழரசுக் கட்சி தனி வழி போகவே முயல்கின்றது. தமிழரசுக் கட்சி தனி வழி போவதால் சாதிக்கப் போவது ஒன்றுமில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும் கட்சிக்கென யாப்பு உருவாக்கப்பட வேண்டும் ஏணைய தமிழ்க் கட்சிகளையும் இணைத்ததான பயணத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்ப முன்வரவேண்டும் என்ற தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா முன் மொழிந்துள்ளமையை நிறைவேற்றுவது காலத்தின் கட்டாயமாகும். இதன் மூலமே தமிழரின் உரிமைப் பயணத்தை அர்த்தமுள்ள பாதை நோக்கி நகர்த்துவதாகவும் திசைமாறிக் கிடக்கின்ற தமிழ்த்தேசிய உறவுகளையும் அணைத்து இணைத்து செல்லக் கூடியதாகவும் இருக்கும்.

• "தமிழர் விவகாரம் - பிச்சைக்காரனின் புண்"

தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தமிழர் விவகாரம் ஒரு "பிச்சைக்காரன் புண்". இந்த அரசியல்வாதிகள் அனைவருமே பிச்சைக்காரர்கள் அல்ல. வசதிக்கு மீறிய பணம் படைத்தவர்கள். இவர்களது அரசியல் வாழ்க்கை "தமிழர் விவகாரம் என்ற பிச்சைக்காரப் புண்ணை" வைத்தே பின்னிப் பிணைந்து ஓடிக் கொண்டிருக்கின்றது. இது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும். தென்னிலங்கை மக்கள் தற்போதுதான் ஓரளவேனும் உணரத் தொடங்கியுள்ளனர். எனவே தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் தமக்கான அரசியலை நடத்துவதற்கு முற்றுப்புள்ளியிட்டு தமிழ்த் தேசியத்தை நோக்கி இதயசுத்தியுடன் செயற்பட முன்வரவேண்டும்.

• 75 வருடகாலமாக சுமக்கும் சிலுவை

தமிழ் மக்களைப் பொறுத்து 75 வருடகாலமாக சுமக்கும் சிலுவையுடன் இலங்கை மக்களுக்கே பொதுவான சுமைகளையும் புதிய ஆண்டிலும் சுமந்தாக வேண்டும். தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா முன் மொழிந்துள்ளமை நிறைவேற்றுமாயின் தமிழ்த்தேசியம் புதிய பாதையில் அடி எடுத்து வைப்பதாக இருக்கும்.

Email : vathevaraj@gmail.com


இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Raymond Cho
MPP - Scarborough North
Constituency Office
Unit B, 4559 Sheppard Ave. E
Scarborough, ON M1S 1V3
(416) 297-5040 | raymond.choco@pc.ola.org
www.raymondcho.ca
Ontario


HAPPY
new year
2023
இனிய
தைப்பொங்கல்
மற்றும்
தமிழ் மரபுத் திங்கள்
நல்வாழ்த்துக்கள்
Happy Thai Pongal
& Tamil Heritage Month
Hon. Mary Ng, MP
Markham-Thornhill
16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-8100 | Mary.Ng@parl.gc.ca
maryngmp.ca | @maryngMarkhamThornhill
@Mary_Ng | @Mary_Ng


Majestic City
Jayasaji JEWELLERY
416 299 5479
416 293 5935
OATC OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Dynamic Health and Sports Injury Clinic
416-439-1900
SARAVANAA BHAVAN
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
3 locations in Canada
CENTRE FOR YOUTH EMPOWERMENT & COMMUNITY SERVICES - TORONTO
Presents
For tickets, visit:
www.universe.com
universe
a ticketmaster company
நீயா நானா புகழ்
கோபிநாத்துடன்
ஒரு மாலைப்பொழுது
Chinese Cultural Centre
5183 Sheppard Avenue East.
Saturday January 14th, 2023 at 6:30 PM
அனைவரையும் மகிழ்விக்கும் கனடிய இளம் வாத்தியக் கலைஞர்களின் இனிய இசையோடு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.
பின்னர் நீயா? நானா? புகழ் கோபிநாத் அவர்களுக்கான உயரிய கௌரவம் வழங்கப்பெற்று தொடர்ந்து அவர் ஒரு மணி நேர பயனுள்ள உரையாற்றுவார்.
இறுதியில் மேடையில் அவருடன் புகைப்படம் எடுப்பதற்குரிய சந்தர்ப்பம் அனைவருக்கும் வழங்கப்படும்.
NEW SPICELAND SUPER MARKET
tasty தமிழா
Raj Nadarajah
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
For information, visit http://www.cyecstoronto.ca or
Call 647 762 9512 or 647-891-7725
E-mail: admin@cyecstoronto.ca
RE/MAX ACE
416-270-1111
CHAMPIONS
OFF TRACK BETTING
416-457-4300
MAHAANS
Pick & Press Oil Mill Inc.
ASSORTED SOUTH INDIAN
SNACKS & SWEETS
514-833-8332

tasty தமிழா ™

தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...




இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call:
416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC



உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் எங்கள் இனிய தைப்பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

HAPPY THAI PONGAL & TAMIL NEW YEAR



VIJAY THANIGASALAM



MPP for Scarborough-Rouge Park

8130 Sheppard Avenue East, Unit 105 Scarborough, ON M1B 3W3 | vijay.thanigasalam@pc.ola.org | 416-283-8448

# உள்ளூராட்சி தேர்தல் – மாறும் கட்சிகள், காட்சிகள் மற்றும் களங்கள்

**- யாழிலிருந்து நடராராசா லோகதயாளன்**




**தே**ர்தல் காலத்தில் கட்சி மாற்றம், அணி உருவாக்கம், புதிய கூட்டு இவற்றிற்குப் பஞ்சம் இருப்பது இல்லை இது வடக்கு கிழக்கிற்கு மட்டும் விதி விலக்கும் இல்லை.

இலங்கையின் மினித் தேர்தல் அறிவிக்கப்பட்டு வேட்புமனுத் தாக்கல் திகதியும் அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் இந்த தேர்தல் நடக்குமா என்பதும் இன்றுவரை உறுதி கூறமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. இவ்வாறு நடக்குமா என ஐயம் உள்ள ஒரு தேர்தலிற்காக அரசியல் குத்து வெட்டுக்கள் இழுபறிகள் மட்டுமன்றி குழி பறிப்புக்களும் தொடங்கிவிட்டன.

வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மேலும் சில கட்சிகளை இணைத்து கூட்டமைப்பு அமைக்க ரெலோ முயல்கின்றது. கூட்டமைப்பிலேயே தமிழ் அரசுக் கட்சியின் வாக்கு வங்கியினையும் ரெலோவிற்கு தாரை வார்ப்பதாக தமிழ் அரசுத் தொண்டர்கள் நினைகின்றனர். இதேநேரம் ஒருவாறு கூட்டமைப்பிற்குள் இணைந்துவிட்ட புளட் ரெலோவிற்கு இவ்வளவு சபைகளையும் அள்ளிக் கொடுத்த தமிழ் அரசுக் கட்சி யாழில் எமக்கு மட்டும் வலி. தெற்கு மட்டும்தானா இம்முறை மானிப்பாய் அல்லது கோப்பாயினையும் பெற வேண்டும் என எண்ணும் இந்த நிலையில் முல்லைத்தீவு மன்னாரிலும் நிலை இதைவிட மோசமாகவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் விரும்பியோ விரும்பாமலோ ஒருவரின் தனிக் கட்டுப்பாட்டில் உள்ளது இதனால் இம்முறையும் அங்கே நம்மை வெட்டிவிடுவாரோ என்ற அச்சமும் உள்ளது. இந்தக் காலத்திலேயே தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவில் மெகா கூட்டணி என்ற பேச்சிற்கே இடம் இல்லை. முடிந்தால் ஏனைய இரு கட்சிகள் இணங்கினால் அனைவரும் தனியாகவும் அவர்கள் இணங்காது விட்டால் கூட்டமைப்பாகவும் மட்டுமே போட்டியிடுவதாகத் தீர்மானித்தனர். இதனை கூட்டமைப்பில் உள்ள கட்சிகளையும் வெட்டிவிட முயற்சி எனவும் ஓர் கூற்று கூறப்படுகின்றது. இது கூட்டமைப்பின் நிலை எனில் வெளிக் கட்சிகளிடமும் இதுதான் நிலையாகவே உள்ளது ஆனால் விடயம் வெளியே தெரியவில்லை என்பதுதான் உண்மை.

குறிப்பாக இலங்கையில் உள்ள அனைத்துக் கட்சிகள் மட்டத்திலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்திய ஒரே தேர்தலாக இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் விளங்குகின்றது. ஏனெனில் தமிழர் தரப்பில் கூட்டமைப்பிற்கு வெளியே ஓர் மகா கூட்டணியை அமைத்து விடுவோம் என மூத்த அரசியல்வாதியும் சட்டத்தரணியுமான என். சிறீக்காந்தா பெரும் முயற்சியில் ஈடுபடுகின்றார். இதற்காக சி.வி. விக்னேஸ்வரன், சுரேஸ் பிறேமச்சந்திரன், ஐங்கரநேசன், ஆனந்த சங்கரி, அனந்தி சசிதரன் ஆகியோரையும் சந்தித்துப் பேசியுள்ளார். அக்கூட்டணியும் முதல் கோணல் முற்றும் கோணலாகவே காணப்படுகின்றது. ஏனெனில் அங்கே எந்தக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடக்கம் பெரும் பிரச்சனையாகவே உள்ளது. இந்த நிலையில் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளட்டும் வெளியே வந்தால் இதிலே இணைத்து பயணிக்கலாம் என்பது இதில் உள்ளவர்களின் கணிப்பாக உள்ளது.




இவ்வாறு கூட்டணி அமைத்தால் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தனக்கு கிடைத்த புதிய சின்னமாகிய மானில் ஒரு முறை பாய்வோம் என எண்ணுகின்றார். இதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் அணியும் இணங்கிவிட்டது. இருப்பினும் மூத்த அரசியல்வாதியான சிறீக்காந்தவோ மான் இன்னும் வளரவில்லை அதனால் ஓடாது வேறு சங்கரி ஐயாவுடன் பேசி சூரியனில் அல்லது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட மீனில் போட்டியிடலாம் என ஆலோசிக்கின்றார். இதிலே மீனில் போட்டியிட்டால் அது சுரேஸ் பிறேமச் சந்திரனின் கட்சி நான் பங்குகொள்ள மாட்டேன் என அடியோடு கூறிவிட்டார் பொ. ஐங்கரநேசன் என்பதனால் அதிலும் ஒரு இடர்பாடாகவுள்ளது. இவை அனைத்தையும் தாண்டி ஒருவாறு சங்கரியாரை சரி செய்து அந்தக் கட்சியின் பெயரில் போட்டியிட சம்மதித்தால் விக்னேஸ்வரன் அணி இணங்குமா புதிய கட்சி எடுத்து முதல்முறையும் வேறு சின்னமா என்ற தாக்கமும் அவருடன் இணைந்த மணி அணியும் இணங்குமா என்பதும் கேள்விக்குறியாகவே இருந்தாலும் இதைவிட பெரும் நெருக்கடியும் காத்திருக்கின்றது.

மூன்று கட்சிகள் மட்டுமே கூட்டாக இருக்கும் இடத்திலேயே எந்தக் கட்சிக்கு எத்தனை சபை அல்லது எத்தனை உறுப்பினர்கள் என்பதில் அதி உச்ச இழுபறியில் நிற்கும் ரெலோ கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போதும் எல்லா இடமும் பறந்து திரிந்து அனைவரும் கையை விட மீண்டும் கூட்டமைப்பு தான் தஞ்சம் என வந்த நிலை இருப்பினும் மெகா கூட்டணி எனச் சென்றால் மட்டும் எத்தனை சபை கிடைக்கும் அல்லது எத்தனை உறுப்பினர்களிற்கான சந்தர்ப்பத்தினை பெறப் போகின்றனர் என்பதனை காணவும் ஆவலாய் உள்ளது. ஏனெனில் யாழ்ப்பாணத்தில் மட்டும் 3 சபைகள் முழுமையாகவும் மேலும் இரு சபைகளில் 50 வீதமும் பெற்ற ரெலோ இம்முறை அமைக்கும் மெகா கூட்டணியில் பெறப்போகும் சபையினையும் ஆசனங்களையும் பெற ஆர்வம் உள்ளது. இது யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி ஏனைய மாவட்டத்திலும் இதுதான் யதார்த்தம்.



தமிழர் தரப்பில் இவ்வாறு உள்ளது ஏனைய கட்சிகள் நல்ல ஒற்றுமையாக உள்ளனர் அல்லது அங்கே பிரச்சனை இல்லை அவர்கள் சாதாரணமாக வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவுள்ளனர் என நினைத்தால் அதுவும் தவறான கணிப்பாகவே இருக்கின்றது. தேசியக் கட்சிகள் முதல் அரசோடு நல்ல உறவோடு உள்ள கட்சிகள் வரையில் இதுதான் நிலையாகவுள்ளது. இதில் ஐ.தே.கட்சி தனித்து போட்டியிடுவதா அல்லது மொட்டுக் கட்சியுடன் கூட்டிணைந்து போட்டியிடுவதா என்பது தொடர்பில் இன்னமும் முடிவல்ல. கூட்டிணைந்தால் தெற்கில் ஒரு நிலை இருந்தாலும் வடக்கு கிழக்கில் வாக்கினைப் பெற முடியாது என்பதாக உள்ளூர் அரசியல்வாதிகள் ஐயம் தெரிவிக்கின்றனர். இதேநேரம் மொட்டுக் கட்சியும் ஈ.பி.டி.பியும் இணைந்து போட்டியிடுவதற்கான ஓர் பேச்சும் தொடர்கின்றது. அவ்வாறு இணைந்து போட்டியிட்டால் எந்தக் கட்சியின் சின்னத்தில்



போட்டியிடுவது வீணையை விட முடியாது என அந்தக் கட்சி உறுதியாகவுள்ளது. இதனால் மொட்டின் நிலை என்னவென்றே நெரியவில்லை. இதேநேரம் யாழ்ப்பாணத்தில் உள்ள சபைகளில் முக்கியமான சபை மாநகர சபை அதில் தற்போது ஈ.பி.டி.பி சார்பில் 10 பேர் உள்ள நிலையில் மணிவண்ணன் சார்பில் ஈ.பி.டி.பி எடுத்த தீர்மானத்திற்கு உடன்படாது ஐவர் அதிருப்தியில் உள்ளதோடு கண்டிப்பாக நால்வர் கட்சியில் இருந்து வெளியேறியே தீருவர் என்ற தோற்றமே காணப்படுகின்றது. இது இறுதியாக ஈ.பி.டி.பி கட்சியினால் நடாத்தப்பட்ட உறுப்பினர்களிற்கான கலந்துரையாடலில் அப்பட்டமாகியது அந்த ஐவரும் கட்சியின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கூட்டிய கூட்டத்தில் பங்கு கொண்டிருக்காதபோதும் ஒருவர் மட்டும் எனக்கு காச்சல் எனத் தெரிவித்து விட்டார். அவ்வாறு தெரிவித்தவர் சில நாள்களின் பின்னர் சபையில் மூத்த உறுப்பினரும் அமைச்சரின் நெருங்கிய சகாவும் ஆகிய ஒருவரது இல்லத்தை நாடி தனது உள்ளக் குமுறலை கொட்டிவிட்டார். இன்னுமொருவரோ போர் முடிந்து அபிவிருத்தியும் தேவையென எண்ணி இணைந்து போட்டியிட்டால் அமைச்சர் அதிகமாக புலியை திட்டுகின்றார். எமது மண் என்றுமே புலிக்குத்தான் முன்னுரிமை அதனால் இனி இணைந்து போட்டியிட மாட்டேன் என்கின்றார்.

இவை அனைத்திற்கும் அப்பால் இன்னுமொரு உறுப்பினர் கூறும் கூற்று தூக்கி வாரிப்போடுகின்றது. அதாவது தனது மகளிற்கு திருமணம் பேசி அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்து திருமணத்திற்கு தாள் வைக்கும் நிலையில் அந்த திருமணம் முறிந்து விட்டதாம் ஏனெனில் ஈ.பி.டி.பி கட்சியில் இருக்கும் ஒரே காரணத்தால்தான் திருமணம் முறிந்தது அதனால் இனி வேண்டவே வேண்டாம் என்கின்றார். இதேபோன்று இன்னுமொருவரோ எந்த விடயத்திற்கும் எம்மிடம் எந்தக் கருத்தையும் கேட்காது அவர்களே முடிவெடுத்து விட்டு அதனை மட்டுமே செய்யுமாறு கூறுவதானால் நாம் ஏன் இருக்க வேண்டும் என்கின்றார். இது ஈ.பி.டி.பி கட்சியின் நிலைமையாகவுள்ளது.

*(தேர்தல் முடியும்வரை இந்த நிலை தொடரும் அதனால் அதுவரை இக் கட்டுரையும் தொடரும்)*

கனடிய செய்திகள்
Canadian News


# ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் தலைமையில் இடம்பெற்ற "மார்க்கம் தைப் பொங்கல் விழா" 2022



முன்னாள் மார்க்கம் மாநகர சபை உறுப்பினரும் தற்போதைய ஒன்றாரியோ மாகாண சபையின் மார்க்கம் - தோர்ன்ஹில் தொகுதி உறுப்பினருமான லோகன் கணபதி அவர்களின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை 8ம் திகதி இடம்பெற்ற "மார்க்கம் தைப் பொங்கல் விழா" 2022 மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பிற்பகல் 3.00 தொடக்கம் இரவு 11.00 மணி வரை இடம் பெற்ற இந்த விழாவில் முத்தமிழின் அழகையும் ஆழத்தையும் அற்புதத்தையும் தெளிவாக விளக்கும் வண்ணம் பல கலைப் படைப்புக்கள் மேடையேற்றப்பெற்றன.

ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் மார்க்கம் தைப்பொங்கல் விழாவிற்கு அத்திவாரமாய் விளங்கிய பல தமிழ் அன்பர்கள் இந்த விழாவின் வெற்றிக்கு காரணமாய் இருந்தார்கள் என்றால் அது மிகையாகாது.



இந்த விழா பல அரசியல் தலைவர்கள் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துரைகளை வழங்கினார்கள்.

குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் கௌரவ ஸ்டிபன் லெட்சே அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பின்னர் பல கலைஞர்களுக்கான கௌரவத்தையும் வழங்கினார்.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.





# "அனலை எக்ஸ்பிறஸ்" சர்வ தேச தொலைக்காட்சி ஊடக நிறுவனம் படைத்தளித்த "பாரம்பரியம்" முழு நீள முத்தமிழ் விழா வரலாறு படைத்தது

## வெற்றிகரமாக ஏற்பாடு செய்து மகிழ்ந்த நண்பர் விமல் மற்றும் அவர் "பாரம்பரியப் படையணி"





சனிக்கிழமையன்று 7ம் திகதி கனடாவின் ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள "சீனக் கலாச்சார மண்டபத்தில்" நடைபெற்ற "அனலை எக்ஸ்பிறஸ்" சர்வ தேச தொலைக்காட்சி ஊடக நிறுவனம் படைத்தளித்த "பாரம்பரியம்" முழு நீள முத்தமிழ் விழா வரலாறு படைத்தது என்றே கூறவேண்டும். 500 இற்கும் அதிகமான இளைய தலைமுறை இசை நடன வாத்திய கலைஞர்கள் பங்கெடுத்த இந்த முழு நீள நுண்கலை முத்தமிழ் விழா தொடர்ந்தும் வருடா வருடம் நடத்தப் பெற வேண்டும் என்ற வேண்டுகோள் அனைத்து தரப்பினராலும் விடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.







இந்த அற்புதமான "பாரம்பரியம்" என்னும் முத்தமிழ் விழாவை வெற்றிகரமாக ஏற்பாடு செய்து மகிழ்ந்த நண்பர் விமல் அவரது துணைவியார் மற்றும் அவர் "பாரம்பரியப் படையணியை" எத்தனை வார்த்தைகளால் பாராட்டினாலும் தகும் என்ற வார்த்தையைத் தவிர எமக்கு வேறு ஒன்றும் தோன்றவில்லை.

சீனக் கலாச்சார மண்டபமும் அதன் வளாகமும் அதிரும் வகையில் ஸ்காபுறோவில் நடத்தப்பெற்ற முதல் முத்தமிழ் விழா "பாரம்பரியம்" என்றால் அது பகட்டுக்காக எழுதும் வார்த்தைகள் அல்ல என்பது நேற்று இந்த விழாவைக் கண்டு களித்தவர்களுக்கு நன்கு புரியும்.

கனடா உதயன் பத்திரிகையும் இந்த விழாவின் அச்சு ஊடகம் சார்பான ஒரு அனுசரணையாளர் என்பதிலும் அந்த நிறுவனத்திற்கு அனலை எக்ஸ்பிறஸ் அளித்த கௌரவமும் என்றும் நினைவில் இருக்கும் என்பதே எமது கருத்தாகும்.

- CANADA UTHAYAN -





எதிர்வரும் 14 – 01 – 2023 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள "நீயா நானா? புகழ் கோபிநாத் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்கான ரிக்கட்டுக்களை இணையவழி ஊடாகவும் www.universe.com ல் பெற்றுக் கொள்ளலாம்.
அத்துடன் ஸகாபுறோ IMMA TRADING COMPANY வர்த்தக நிலையத்திலும் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்காபுறோவில் மெக்னிக்கல் – மார்க்கம் சந்திப்பில் அமைந்துள்ள MAJESTIC CITY MALL இன் உள்ளே *Unit L1 & L14* என்னும் இடத்தில் இயங்கிவரும் IMMA TRADING COMPANY யில் "நீயா நானா? புகழ் கோபிநாத் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்கான $50 $20 ரிக்கட்டுக்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.
தொலைபேசி இலக்கங்கள்
416 722 6998 அல்லது 416 930 0910



# ஈழத்துத் திருக்கோவில்கள் 1031



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## புற்றளை சித்திவிநாயகர் ஆலயம்
## புற்றளை, பருத்தித்துறை

"களியானைக் கன்றை கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் – அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்தாள்
நண்ணுவதும் நல்லார் கடன"

இவ்வாலய வளர்ச்சியை நோக்கின், தற்காலத்தில் ஆகம விதிமுறைகளுக்கமைந்த ஒரு ஆலயமாகத் திகழ்கின்றது. கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம், ஸ்தம்பமண்டபம், வசந்த மண்டபம், கோபுரவாசல் மண்டபம் ஆகிய இவையனைத்தும் கொ்ணட ஆலயமாக புற்றளை சித்திவிநாயகர் ஆலயம் திகழ்கின்றது. இவ்வாலயத்தின் மூலமூர்த்தியாக விநாயகர் விளங்குகின்றார். இவ்வாலயத்தின் தெற்கு வாசல் மூர்த்தியாக வள்ளி தெய்வானை சமேத சுப்ரமணியர் எழுந்தருளியுள்ளார். வைரவ சண்டேசுர மூர்த்திகளுக்கும் சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுவாமி தீர்த்தமாட சிறந்த ஒரு தீர்த்தக்கேணியும், அத்தோடு சுவாமி வீற்றிருக்க அழகிய மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றோடு அன்பர்கள் பலர் பல மடங்களையும் கட்டி உதவியுள்ளார்கள். இவ்வாலயச் சூழலில் அழகிய பூஞ்சோலையொன்றும் காணப்படுகின்றது. ஆலயத்திற்குத் தேவையான மலர்களை இங்கிருந்து பெறுவது வழக்கம். ஆலயத்திற்கு எவ்வாறான உதவிகள் தேவையோ அவற்றையெல்லாம் மனமுவந்து செய்பவர்களாக சித்தி விநாயகருடைய பக்தர்கள் காணப்படுவதால், இவ்வாலயப் பணிகள் யாவும் சிரமமின்றி நிறைவேற்றப்படுகின்றது. இவ்வாறான பக்தர்களை புற்றளை சித்திவிநாயகர் ஆட்கொண்டு அவர்களது வாழ்வில் பல அற்புதங்களையும் நிகழ்த்தியுள்ளார்.

வைகறையில் துயிலெழு என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வாக்கிற்கமைய ஆதியிலிருந்தே சைவாலயங்களில் அதிகாலை நாலு மணிக்கு மணியோசை ஒனிப்பது வழக்கம். இவ்வொலிகேட்ட மக்கள் துயிலெழுந்து தமது கடமைகளை இறைவணக்கத்தோடு ஆரம்பிக்கும் மரபு பண்டைய மரபாகக் காணப்படுகின்றது. புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்திலும் இம்மரபு பண்டுதொட்டு வழக்கத்திலுள்ளது. இவ்வாலயத்திலே அமைந்துள்ள மணிக்கோபுரமும், காண்டாமணியும் பல்லாண்டுகளுக்கு முன்பே அமைக்கப்பட்டுள்ளது.

வைகறையில் ஒலிக்கும் மணியோசையோடு ஆலயத்திலும் பூசைகள் ஆரம்பமாகும். உதயகாலப் பூசை உள்ளிட்ட நாலுகாலப்பூசைகளும் இவ்வாலயத்திலே நடைபெறுவது வழக்கம். இவ்வாலயத்தை நிர்வகிப்பதற்கான மானியம் எதுவும் காணப்படாவிட்டாலும், மக்களுடைய உதவியின் காரணமாக எச்சிரமமுமின்றி இவ்வாலயம் நடைபெறுவது ஒரு முன்னுதாரணமாகும்.

பல ஆலயங்களிலே காணப்படுகின்ற தனிமனித நிர்வாகம் இவ்வாலயத்தில் அறவே இல்லை. தர்மகர்த்தா நிர்வாகத்திற்குக் கட்டுப்பட்ட கோவிலாகவும் இக்கோவில் அமையவில்லை. சித்திவிநாயகரிடம் பக்திகொண்ட மக்களுடைய ஆத்மார்த்தமான அன்பின் அடிப்படையிலேயே இவ்வாலயம் சிறப்பாக நடைபெறுகின்றது. ஊரவர்கள் ஒருமனதுடன் குருக்களிடம் பூசைப்பொறுப்பை ஒப்படைத்து, அவரிடம் நன்மதிப்பும், நன்னம்பிக்கையும் உடையவர்களாய் விளங்குவதால், பூசை வழிபாடுகள் கிரமமாக நடைபெறுகின்றது.

புற்றளை சித்திவிநாயகர் ஆலயம் அமைந்துள்ள சூழலும் சிறப்பாகக் காணப்படுகின்றது. வயலும் வயல்சார்ந்த நிலமும் ஒருபுறம் திகழ, இவற்றின் மத்தியில் மகிழ்மரச்சோலை எழிலோடு விளங்குகின்றது. இவ்வாறானா சூழலில் வீற்றிருக்கும் புற்றளை சித்திவிநாயகப்பெருமான் மூர்த்திகரம் நிறைந்தவராக விளங்குவதை பலரது அனுபவநிகழ்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. சித்திவிநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ள புற்றளை வாழ்மக்களின் வாழ்வையும், வளத்தையும் காணும் அயலூரவர்கள் இத்தகைய வாழ்வு சித்திவிநாயகப்பெருமானின் அருட்கொடையென வாயாரப் போற்றி வாழ்த்துவது வழக்கம்.

ஐம்பத்தியொருவகையான உருவங்கள் விநாயகருக்கு அமைந்துள்ளது. ஒவ்வொரு தோற்றமும் கருத்துடையவையாகக் காணப்படுகின்றன. விநாயகப்பெருமான் வணங்குவதற்கு எளியவர். இவ்வாறாக வணங்குவதற்கு எளியவராக விளங்கும் சித்திவிநாயகப்பெருமானை அடைய அயராத பக்தி வேண்டும். அவருக்குமேல் ஒரு தெய்வம் இல்லை ஆகையால் அவர் விநாயகர். இம்மையிலிருந்து மறுமைக்கு இட்டுச்செல்பவர். ஆகவே அவர் கணபதி. ஞானத்தை அளிக்கக்கூடியவர். ஆகவே அவர் துண்டி கணபதி. இப்படி அவருடைய 51 உருவங்களும் 51 வகையான ஆற்றல்களைக் கொடுக்கக்கூடியவை.

விநாயகருடைய உருவமே மகத்தான பேருண்மையை விளக்குவதாக அமைந்துள்ளது. மிகப்பெரியதும் அதேபோல மிகச் சிறியதுமாக அமைந்துள்ள எல்லாவற்றிலும் இறைவன் பிரம்மமாக இருக்கின்றான். அவ்வாறு பிரம்மவடிவமாக விநாயகர் காணப்படுகின்றார். பெரிய தோற்றமுடைய யானை வடிவமாகவும், சிறிய தோற்றமுடைய எலியை வாகனமாகவும் கொண்டவராக விநாயகர் காணப்படுகின்றார். கணபதி ஆதி அந்தம் இல்லாத நிர்மலமான உருவமற்ற பேரானந்தத்தில் திகழும் பரப்பிரம்மம் என்று சங்கரர் கூறுகின்றார். இவ்வாறு பரப்பிரம்மமாக விளங்கும் சித்திவிநாயகர், புற்றளை வாழ் மக்களின் வாழ்வில் ஒளிவிளக்காக மிளிர்ந்து நல்வாழ்வு கிட்ட எழுந்தருளி அருள்புரிகின்றார்.

"திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவோம்."



# திருவள்ளுவர் பாரதிக்கோர் வழிகாட்டி

திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.Com, MA)
வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா
நிறுவுநர், தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்
Jothy.thirukural@gmail.com



*(கடந்த மாதக் கட்டுரையின் தொடர்ச்சி...)*

**யா**ரிடமும் பாகுபாடு காட்டாதீர்கள், ஒருவரை ஒருவர் வேறு பிரித்துப் பார்க்காதீர்கள், இப் பிரபஞ்சத்தில் எல்லோரும் சமமே என்பதனைக் கூறி இருவருமே ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளனர்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.**
(குறள் 972)

பிறப்பால் எல்லோரும் ஒத்தவர்களெனவும், செய்யுஞ் செயல்களால் மட்டுமே ஒவ்வொருவரதும் சிறப்புகள் மாறுபடுமெனவும் கூறி மனிதர்களுக்குள் ஒற்றுமை உணர்வை வளர்க்கின்றது திருவள்ளுவம்.

**ஓடும் உதிரத்தில் - வடிந்து**
**ஒழுகும் கண்ணீரில்**
**தேடிப் பார்த்தாலும் - சாதி**
**தெரிவதுண்டோ அப்பா.?**

**பிறப்பினால் எவர்க்கும் - உலகில்**
**பெருமை வாராதப்பா**
**சிறப்பு வேண்டுமெனில் - நல்ல**
**செய்கை வேண்டுமப்பா**

என்று சமூக நீதியினை முன்னிறுத்தி ஆசியஜோதியிலே சாதி, மதம், இனம் கடந்து சமத்துவம் பேசிய கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அவர்களின் வரிகளைக்கூட இவ்விடத்தில் நினைவுகூரலாம். வேற்றுமையின்றி ஒற்றுமையாய் எல்லோரிடமும் அன்பு காட்டுங்கள், அன்பினால் மட்டுமே இந்த அகிலம் ஆனந்தம் பெறுமென்றும், அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பென்றும், அன்பில்லா மனித உடல் எலும்பைத் தோல்போர்த்த வெற்றுடலென்றும், அன்புநிறை மானிதரால் மட்டுமே வேளுபாடுகளின்றி ஒற்றுமையாக வாழமுடியுமென்றும் திருக்குறள் எடுத்துரைக்கின்றது.

**அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு.**
(குறள் 80)

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**
**அன்னநீ ரார்க்கே உள.**
(குறள் 527)

தனக்குக் கிடைத்த உணவைத் தன் சுற்றத்தையும் கரைந்து அழைத்துப் பகிர்ந்துண்ணும் காக்கையின் பண்பினைப்போல மனிதர்களும் வாழவேண்டுமெனக்கூறி மனிதனிடம் பாகுபாடுகளைக் களைந்து ஒற்றுமை வளர வழிசெய்கிறது திருவள்ளுவம். ஐந்தறிவு உயிர்களிடமுள்ள நற்பண்புகள் இன்று ஆறறிவு படைத்த மனிதனிடம் அருகிச் செல்கின்றன என்பதனை உணர முடிகிறது. அந்நிலையினை மாற்ற மேன்மைமிகு திருக்குறளைக் கற்போம்.

திருவள்ளுவரின் கருத்துகளைப் போலவே பாரதியாரும் உலகில் வாழும் அனைவருமே சமமானவர்களெனக் கூறிச் சமூகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் களைந்தெறிய முற்பட்டுள்ளார். **“ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்”** என்றார்.

**“சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்**
**தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்”**

என்று குழந்தைகள் உள்ளத்திலும் அனைவரும் சமமென்ற நல்லெண்ணத்தை வளர்த்தார். **கொத்தித் திரியும் கோழியையும், பால் தரும் பசுவையும், வண்டி இழுக்கும் நல்ல குதிரையையும், அண்டிப் பிழைக்கும் ஆட்டையும் ஆதரிக்க வேண்டுமென்று** பாப்பாப் பாட்டிலே ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

**சாதிக் கொடுமைகள் வேண்டாம்- அன்பு**
**தன்னில் செழித்திடும் வையம்..”** என்று முரசு என்ற பகுதியிற் சொன்ன பாரதியார்,
**சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும்**
**சிந்தை இரங்காரடி - கிளியே**
**செம்மை மறந்தாரடி..**
என்று தன் கிளிக்கண்ணியிற் கலங்கித் துடித்தார்.

**“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே”**
என்பதன் மூலம் ஒற்றுமை ஒன்றே உயர்வுகளைத் தரவல்லது என்ற உண்மையை உலகிற்குக் கூறினார்.

இவ்வாறாக இருவரும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி ஒற்றுமையை வளர்க்க உழைத்தவர்கள். அன்பையும், அறத்தையுமே போதித்தனர். ஆனால் இன்று அன்பும், அருளும், அறமும் அருகிச் செல்கின்றன. குடும்பங்களுக்குள், நட்புகளுக்குள், இனங்களுக்குள், நாடுகளுக்குளென உலகெங்கிலும் ஒற்றுமையின்மையே அதிகரித்துச் செல்கிறது. ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளுக்குள்ளேயே ஒற்றுமை குறைந்துசெல்கிறது. பணத்தை நோக்கியே இந்த உலகு ஓடுகின்ற அவலநிலைதான் காணப்படுகிறது.

திருவள்ளுவரும், பாரதியும் பெண்முன்னேற்றச் சிந்தனைகளை வெகுவாக வெளிப்படுத்தினர். தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்குறளிற் பெண்களின் முக்கியத்துவத்தையும், பெண்களின் சிறப்புகளையும் பல குறள்களிற் பதிவு செய்துள்ளார்.

**மனைக்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**
(குறள் 51)

இல்லறத்திற்குரிய நல்ல பண்புகளைக் கொண்டவளாக, தன் கணவனுக்குக் கிடைக்கும் வருவாயை வைத்துச் சிறப்பாகக் குடும்பத்தை நடாத்தத் தெரிந்த பெண்ணே குடும்பத்திற்கேற்ற பெண் என்கிறது திருவள்ளுவம். பெண்ணின் கையிற் குடும்பத்தின் நிதி முகாமைத்துவத்தைக் கொடுத்துப் பெண்ணை மேன்மைப்படுத்தும் அதே நேரம் பெண் கல்வி அறிவுடையவளாக இருக்க வேண்டும் என்பதனையும் இக்குறள் வாயிலாகத் திருவள்ளுவர் உணர்த்தியுள்ளார்.

**சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை.**
(குறள் 57)

பெண்களைக் காவலில் வைத்துக் காக்கும் முறை சிறப்பல்ல, அச்செயல் அவர்களை அடிமைப்படுத்துவது போன்றதே என்று ஆண்களுக்கு அறிவுரை பகர்கிறது இக்குறள். பெண்கள் தம் மனத்திண்மையாலும், அறிவினாலும் தம்மைத்தாமே பாதுகாத்துக்கொள்ளுதலே சிறப்பு.

சமூகத்திலே பெண்கள் மேன்மைப் படுத்தப்பட வேண்டும். வீடாள்வதிலிருந்து நாடாளும்வரை பெண்களுக்கும் சகல வாய்ப்புகளும், உரிமைகளுமுண்டு என்பதனைப் பாரதியின் பாக்களும் வலியுறுத்துகின்றன. பெண் முன்னேற்றங் கருதிப் பல பாக்களை இயற்றிச் சமூகத்திலிருந்த பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

**பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தான்- புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்**

என்று சமூகத்தைச் சாடிய பாரதி புதுமைப் பெண்ணைக் காண விளைந்தார். **“பெண்களறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடுங் காணீர்”** என்று இந்த உலகில் அறியாமை நீங்க வேண்டுமாயின் பெண்களும் கல்வி கற்றிருக்க வேண்டுமென்றார்.

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி.**
என்று பெண்களின் திறன்களைக் கொண்டாடுங்கள் என்ற பாரதி,
**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**
**செம்மை மாதர் திறம்புவது இல்லையாம்...**
(புதுமைப்பெண் செய்யுள்)

பெண் கல்வியறிவும், திறன்களும் நிறைந்தவளாக இருந்தால் யாருக்கும் அடிபணியத் தேவையில்லையெனப் பெண்களுக்குத் தன்னம்பிக்கையினை ஊட்டினார். பாஞ்சாலி சபதம் என்ற அற்புத இலக்கியத்தை உருவாக்கி அதன்மூலம் புதுமைப் பெண்ணை உலகிற்குக் காட்டினார். பெண் விடுதலை பெற்றாற்தான் மண் விடுதலை பெறும் என்பதனைப் பாஞ்சாலி சபதத்தின் மூலம் உணர்த்தினார். பாரதி கண்ட கனவுபோல் இன்று பெண்கள் உலகின் அத்தனை துறைகளிலும் சாதித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும் ஆங்காங்கே பெண்ணுக்கான அதீத கட்டுப்பாடுகளும், அடிமைப்படுத்தல்களும் இருக்கத்தான் செய்கின்றன. இந்நிலை முற்றாக மாற ஆண்களின் புரிந்துணர்வும், ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகிறது.

இவர்கள் இருவருமே நடுநிலை தவறாத செங்கோன்மையினையே விரும்பினார்கள். செங்கோல்போன்று நேரிய ஆட்சியை அரசுகள் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினார்கள். நாடுகளில் நல்லாட்சி நடைபெற்றால் ஒவ்வொரு குடிமகனும், ஒவ்வொரு குடும்பமும் அமைதியாகவும், தத்தம் கடமைகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். நெறிதவறாத அரசனை மக்கள் இறைவனாகப் போற்றித் துதிப்பர் என்கிறார் திருவள்ளுவர்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்**
(குறள் 388)

**அல்லற்பட் டாற்றாது அழுதகண்ணீரன்றோ**
**செல்வத்தைத் தேய்க்கும் படை**
(குறள் 555)

என்ற குறட்பா மூலம் நேர்மையற்ற அரசியலாற் பாதிக்கப்படும் மக்களின் கண்ணீரானது அந்த நாட்டையும், செல்வத்தையும் அழித்தொழிக்க வல்லது என்பதனைத் தெளிவுபடுத்துகிறார்.

**அரசியல் பிழைத்தோர்க்கு அறனே கூற்றுவன்** என்ற இளங்கோவடிகளின் சிலப்பதிகார வரிகளும் இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

பாரதி வாழ்ந்த காலத்திலே பாரதமாதா ஆங்கிலேயன் கையிற் சிக்குண்டு தவித்தாள்.

**என்று தணியும் இந்த சுதந்திர தாகம்**
**என்று மடியும் இந்த அடிமையின் மோகம்....**
**என்று எமது அன்னை கை விலங்குகள் போகும்...**

செங்கோன்மை தவறிய ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்த சமத்துவமின்மையையும், அடிமைத்தனத்தையும் அகற்றிப் பாரத தேசத்தின் சுதந்திரத்திற்காகப் போராடினார். முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராகப் போராடிய ஓர் சமூகப் புரட்சியாளன் பாரதி என்றால் மிகையாகாது. பாரதியின் பாடல்கள் மக்களிடையே தேசிய உணர்வைத் தூண்டின.

பாரத தேசத்தைப் பாஞ்சாலியாகவும், ஆங்கிலேயர்களைக் கௌரவர்களாகவும், சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பாண்டவர்களாகவும் உருவகப்படுத்திப் பாஞ்சாலி சபதம் எனும் அற்புத இலக்கியத்தின் மூலம் பாரத மாதா ஆங்கிலேயன் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுத் துயருறுகின்றாள் என்பதனைத் தெளிவாக வெளிப்படுத்தினார். திருதராட்டினனின் நடுநிலையற்ற ஆட்சியினையும், துரியோதனனின் கொடுங்கோன்மையினையும் எடுத்துக் காட்டாகக் கூறி இந்திய தேசத்தின் விடுதலையின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தினார்.

**பேய் அரசு செய்தால்**
**பிணந்தின்னும் சாத்திரங்கள்..**
என்று கூறி மக்கள்நல அரசினையே விரும்பி நின்றார். மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு அரசு செயலாற்ற வேண்டும். நல்லாட்சி நடைபெறும்போதுதான் நாட்டில் சமூக நீதி கடைப்பிடிக்கப்படும். சமத்துவம் பேணப்படும். வருமானப் பகிர்வு சரியாக நடைபெறும். நாட்டில் வறுமை நிலவாது, வீட்டுப்பொருளாதாரமும், நாட்டுப்பொருளாதாரமும் எந்தவிதத் தேக்கமும் இன்றி வளர்ச்சி நிலையைக் காட்டும்.

எல்லோரும் எல்லாமும் பெற்று வாழவேண்டுமெனின் நாட்டு அரசியல், பொருளியற் செயற்பாடுகள் அறநெறி தவறாது இருக்க வேண்டுமென்பதே உண்மை. இன்று அறத்திற்கும், அரசியலுக்கும் தொடர்பே இல்லாத தன்மையினைத்தான் பல நாடுகளிலும் பார்க்க முடிகிறது. பல நாடுகளில் ஒரு புறத்தில் செல்வம் குவிந்து கிடக்கிறது. மறுபுறத்தில் பட்டினிச் சாவு தலைதூக்கி நிற்கிறது. இந்த நிலைமை மாறவேண்டுமெனத் திருவள்ளுவரும், பாரதியாரும் அன்றே தம் பாக்களால் எச்சரித்தார்கள். மற்றவர்களிடம் கையேந்தி வாழும் வாழ்க்கையினை இருவருமே வெறுத்தார்கள். பின்வரும் குறட்பாவிலிருந்து திருவள்ளுவரின் கொள்கையினை நாம் உணர முடிகிறது.

*(தொடர்ச்சி _23_ பக்கம்)*

# தலை விழுந்தால் எனக்கு வெற்றி, பூ விழுந்தால் உனக்குத் தோல்வி: ''தேசியச் சிக்கலில்'' இரணிலின் சூதாட்டம்

- என் சத்தியமூர்த்தி

கடந்த மாதம் மற்றும் கடந்த ஆண்டு நடைபெற்ற அனைத்துக் கட்சிகளுடனான ஆயத்த மாநாட்டின் தொடர்ச்சியாகவும், அவரும் அவரது குழுவி-னரும் தமிழ் கட்சிகளுடன் இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர் என்பதோடு, ஜனாதிபதி இரணில் விக்ரமசிங்க இந்த வாரம் சனவரி 10 முதல் 13 வரை (சந்திப்பு ஒரு வாரம் தள்ளிப் போடப்பட்டுள்ளது) நீண்ட காலமாக நீடித்த இனச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காக நான்கு நாள் மரதன் அமர்வுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தனது சொந்தத் தேசிய நாள் காலக்கெடுவான பெப்ரவரி 4 ஆம் தேதி, ஒரு முடிவை அறிவிக்க, ஜனாதிபதி, பல முறை தாமதப்படுத்தப்பட்ட செயல்முறைகளை விரைவுபடுத்துவது நல்லது, மணித்தியாலம் மற்றும் நாட்கள் மட்டுமல்ல, மாதங்கள், ஆண்டுகள் மற்றும் தசாப்தங்கள் கழிந்துவிட்டன.



கடந்த மாதம் மற்றும் வருடத்திற்கான ஆயத்த சர்வகட்சி மாநாடு மற்றும் அவரும் அவரது குழுவினரும் தமிழ் கட்சிகளுடன் நடத்திய இரண்டு சுற்று பேச்சுக்களின் தொடர்ச்சியாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக முன்னாள் மாரத்தான் நான்கு நாள் அமர்வுக்கு அழைப்பு விடுத்துள்ளார். - வரையப்பட்ட இனப்பிரச்சினை, இந்த வாரம், ஜனவரி 10-13 வரை. பிப்ரவரி 4 ஆம் தேதி தனது சொந்த தேசிய தின காலக்கெடுவைக் கருத்தில் கொண்டு, ஒரு முடிவை அறிவிப்பதற்கு, ஜனாதிபதி, மணிநேரங்கள் மற்றும் நாட்கள் மட்டுமல்ல, மாதங்கள், ஆண்டுகள் மற்றும் பல தசாப்தங்களாக தாமதமாகி வரும் செயல்முறைகளை விரைவாகக் கண்காணிக்கிறார்.

கடந்த காலங்களில் குறைந்தபட்சம் மூன்று வெவ்வேறு காலக்கெடுக்களில் இரணிலின் பெயர் சமாதான முன்னெடுப்பகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. முதலாவது எதிர்மறையான மற்றும் மறுப்பு அணுகுமுறையாகும், மற்ற இரண்டும் இன்னும் மி-கவும் நேர்மறையான முன் முயற்சிகள் ஆகும். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அவர், இதுவரை சிந்திக்கப்பட்டவற்றில் சிறந்ததாக இருந்த “சந்திரிகா பொதி”யை உள்ளடக்கிய அரசியலமைப்புத் திருத்த வரைவை எரித்தார்.

அதே நேரத்தில் தமிழர்களின் “ஒற்றைப் பிர-திநிதியாக” தம்மை அறிவித்த விடுதலைப் புலிகள், இரணிலின் செயலைக் கண்டு ஒரே நேரத்தில் மகிழ்ச்சியும் சோகமும் அடைந்திருப்பார்கள். ஏனென்றால், சிங்கள அரசமைப்பும் கூட இந்த முன்மொழிவுகளை (விடுதலைப் புலிகள்) நிராகரித்ததால் மகிழ்ச்சி அடைந்தனர். போகூழ் வசமாக, இந்த ஒரு செயலின் மூலம், புலிகளிடம் மட்டுமே இருந்திருக்கும் வரைவை நிராகரிக்கும் இன்பத்தை இரணில் இழந்தார்.

இரணில் மற்றும் அவரது ஐக்கிய தேசியக் (ஐதேக) கட்சியினர் இந்த வரைவை எதிர்ப்பதாகக் கூறினர். ஏனெனில் இது ஒரு பெரிய இனத் தீர்வுக்கான கால நீடிப்பை மறைத்ததால், வரைவை எதிர்ப்பதாகக் கூறினர். மேலும் அவர்கள் முந்தையதை (நாடாளுமன்றத்தின் காலத்தை இரண்டு ஆண்டுகள் நீடிப்பது) எதிர்த்தார்களே தவிர பிந்தியதை (பிராந்தியங்களின் ஒன்றியம்) எதிர்க்கவில்லை. உண்மை என்னவென்றால், 1994 ஜனாதிபதித் தேர்தலில் அவர் இருந்ததைப் போலவே, தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் அவரைப் பிரபலப்படுத்திய பொதி குறித்து அவர்களும் அச்சமடைந்தனனர். 62 வயதில், ஜனாதிபதித் தேர்தலில் அவர் (சந்திரிகா) ஆகக் கூடிய வாக்குப்பதிவு விழுக்காட்டை வைத்திருக்கிறார். இது 2010 போருக்குப் பிந்தைய வாக்கெடுப்புகளில் தற்போதைய மஹிந்த இராஜபக்ச அதனை மிஞ்ச முடியவில்லை.

ஆனால் இந்த விடயத்தில் இரணிலின் அடுத்த இரண்டு முயற்சிகளும் சாதகமாகவே அமைந்தன. அதே ஜனாதிபதி சந்திரிகாவின் கீழ் பிரதமராக இருந்த அவர் நோர்வேயின் அனுசரணை/நடுவர் மூலம் விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்தினார், பின்னர் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் பிர-தமராக இருந்தபோது (2015 - 2019) அரசியலமைப்புப் பேரவைக்கான வழிநடத்தல் குழுவின் வரைவை இணை ஆசிரியராக (2015-19) இருந்தார். ஆகூழ்வசமாக, இரணில், இப்போது ஜனாதிபதியாக இருந்தாலும், ஆறு முறை பிரதமராக இருந்தாலும், எப்போதும் “கூட்டு” அரசாங்கங்களில் இருந்திருக்கிறார், அவரது கட்சி சகா மற்ற இடத்தை ஆக்கிரமித்தபோது அல்ல. அதாவது நிறையச் சொல்லவில்லை என்றால், அது எதையாவது சொல்லும்.

கூட்டாட்சி அல்லது எதுவுமில்லை

ஒரு கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கத்திற்கு பெரிதாக ஒன்றும் இல்லை. ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரனை இணை ஆசிரியராகக் கொண்ட 2015-19 ஆம் ஆண்டுக்கான வழிநடத்தல் குழுவின் வரைவு இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றெனக் கூறப்பட்டது. நிச்சயமாக, சுமந்திரன் வரைவ-ில் ஒற்றையாட்சி அல்லாத, கூட்டாட்சி அல்லாத கருத்தை விளக்க முயன்றார், ஆனால் தோல்வியடைந்தார். இன்று, அவர் மற்றத் தமிழர்களுடன் சேர்ந்து கொண்டு, “கூட்டாட்சி” கட்டமைப்புக்குள் மட்டும் தீர்வுகாண வேண்டும் என்று மிரட்டுகிறார்.

அனைத்துக் கட்சி மாநாடு ‘தேசியச் சிக்கலை” தீர்க்கத் தவறினால் (தேசத்தின் பொருளா-தாரப் போராட்ட நெருக்கடி இனப்பிரச்சினையின் முக்கியத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடாலும்) அல்லது பேச்சு வார்த்தையின் தொடக்கத்திற்கு முன்னரே ஒரு அம்சத்தில் அது முறிந்து போகலாம்.

பேச்சுவார்த்தைகளின் தொடக்கத்திலோ அல்லது அனைத்து கட்சி மட்டத்திலோ நடைபெறும் பேச்சு வார்த்தைகளிலோ, அதை எதிர்க்கும் சிங்கள தேசியவாதிகள், இந்த ஒரு விடயத்தை (கூட்டாச்சி) தெளிவுபடுத்துமாறு அரசாங்கப் பிரதிநிதிகள-ிடம் கேட்டு - அங்கிருந்து வெளியேறினாலும் வியப்படையக் கூடாது. அவர்கள் அந்த இடத்தை விட்டு வெளிநடப்புச் செய்தாலும் அல்லது உள்ளே இருந்து எதிர்ப்புத் தெரிவித்தாலும் அவ்வளவுதான். முழு மாந-ாடும் முற்றுப்பெற்றுவிடும்.

விமல் வீரவங்ச, உதய கம்மன்பில்ல போன்ற மறுப்பாளர்களை அடையாளம் காண முடியும் என்றாலும், மதில் மேல் பூனை போல் என்ற பழமொழிக்கு ஒப்பாகக் காணப்படும் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (சமகி ஜன பலவேகய) நிலைப்பாடு பற்றிச் சொல்ல முடியாது இருக்கிறது. அவர்கள் நேர்மறையான அறிக்கைகளை வெளியிடுகின்றனர், ஆனால் அவர்கள் (ஐமச) கருத்துத் தெரிவிக்கு முன்னர் உண்மையில் அரசாங்கத்தின் முன்மொழிவுகள் அல்லது தமிழர்களுடனான உடன்பாடு பற்றிய விவரங்கள் தேவைப்படும்.

இது ஐக்கிய மக்கள் சக்தி உடன் நிற்கவில்லை. முன்னாள் ஜனாதிபத-ியும் பிரதமருமான மகிந்த இராஜபக்ச இதுவரையில் வரவேற்கத்தக்க மற்றும் ஆதரவான அறிக்கைகளை வெளியிட்டு வருகின்ற நிலையில் - அவர் அண்மையில் நோய்வாய்ப்பட்டிருக்கும் ததேகூ இன் தலைவர் ஆர் சம்பந்தனை சந்தித்துப் பேசியுள்ளார் - இரணில் தலைமைத்துவத்துக்கு அதிகாரப்பூர்வ உத்தரவாதம் அளிக்கும் அவரது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி **(SLPP)** இந்த விடயத்தில் என்ன கூறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீண்டும் ஒன்றிணைப்பது தொடர்பாக முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஆவலுடன் காத்திருக்கும். இதற்கிடையில், தமிழ்க் கட்சிகள் அரசியல் தீர்வுக்கான தங்கள் கவலைகளை ‘கூட்டாட்சி’ என்ற ஒற்றைச் சொல்லில் அடக்கிவிட்டார்கள். *(மிகுதி அடுத்த வாரம்)*

(இந்தக் கட்டுரையை எழுதியவர் ஒரு கொள்கை ஆய்வாளர் மற்றும் அரசியல் விமர்சகர், சென்னையில் வாழ்கிறார்.
மின்னஞ்சல்- **sathiyam54@nsathiyamoorthy.com.**

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்தக் கட்டுரையை:
**https://www.google.com/search?q=Heads%2C+I+win%2C+tails%2C+you+lose%3A+Ranil%E2%80%99s+gambit+on+the+%E2%80%98national+problem%E2%80%99&oq=Heads%2C+I+win%2C+tails%2C+you+lose%3A+Ranil%E2%80%99s+gambit+on+the+%E2%80%98national+problem%E2%80%99&aqs=chrome..69i57j69i60l2.1763j0j15&sourceid=chrome&ie=UTF-8**
என்ற இணையதளத்தில் படிக்கலாம்.
*- தமிழாக்கம்: கனடா நக்கீரன்*

*(_22__ பக்கத் தொடர்ச்சி)*

## திருவள்ளுவர் பாரதிக்கோர் வழிகாட்டி

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்.** (குறள் 1062)

எல்லோருக்கும் உணவளிக்கும் உழவுத்தொழிலை இருவருமே மதிக்கச் சொன்னார்கள். அடிப்படைத் தேவைகளுள் மிகப் பிரதானமான உணவினைத் தரும் விவசாயத்தின் அவசியத்தை எடுத்துரைத்துத் தன்னிறைவுப் பொருளாதாரத்தை வலியுறுத்தினார்கள்.

**உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.** (குறள் 1032)

மகாகவி பாரதியும் உலகில் யாருமே உணவின்றி வருந்தக்கூடாதென்றார். உணவு கொடுக்கமுடியா உலகினைத் தன் கோபக் கனலால் எரித்தார்.

**இனியொரு விதி செய்வோம் - அதை**
**எந்த நாளும் காப்போம்**
**தனியொருவனுக்கு உணவில்லையெனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்.**

பஞ்சமின்றி மனிதன் உண்டு களித்து, வளங்களோடு வாழவேண்டுமென்று கனாக்கண்டார் பாரதி. பின்வரும் வரிகளூடாக விவசாயத்தின் மேன்மையினை மக்களுக்கு விளங்கவைப்பதுடன் முயற்சியற்றிருக்கும் சோம்பேறி மனிதர்களை இகழ்ந்தார்.

**உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் - வீணில்**
**உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்...**

இன்று விவசாய நிலங்கள் வேறு பாவனைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. விவசாயிகள் தம் வாழ்விற்காகப் போராட்டங்களை நிகழ்த்துதல், உயிர் துறத்தல் போன்றனவும் அண்மைக் காலங்களில் அதிகரித்தே வருகின்றன. ஒருநாடு உணவிற்காக ஏனைய நாடுகளிடம் தங்கியிருக்கும்போது, அரசியல் மற்றும் பொருளாதார இடர்கள் ஏற்படுமாயின் குறித்த நாடானது பெரும் பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடும். ஆனால் இன்று உள்நாட்டு உற்பத்திகளை விடுத்து இறக்குமதிகளிலேயே பல நாடுகள் தங்கியிருக்கின்றன. இந்நிலைமை வரவேற்கத்தக்கதன்று.

ஒவ்வொரு படைப்பாளிகளும் தனித்துவம் மிக்கவர்கள். இருந்தாலும் அவர்களது சிந்தனைகள் அறவழிப் பாதையிற் பல இடங்களில் ஒத்துப்போவதனை அவதானிக்க முடிகிறது. அந்தவகையில் அன்பு, அறம், மொழி, கல்வி, பெண்முன்னேற்றம், சமத்துவம், தன்னம்பிக்கை, பொருளாதார, அரசியற் பிரச்சனைகள் போன்ற இன்னோரன்ன விடையங்களிற் பாரதியின் படைப்புகள் திருவள்ளுவர் வகுத்த வழியில் உள்ளதனை அவதானிக்க முடிகிறது. நாம் திருக்குறளை ஒரு இலக்கியமாக மட்டும் நோக்காது வாழ்வியல் நெறியாகப் பின்பற்றி, அதன்வழி வாழ்ந்து வாழ்வினை வசந்தம் ஆக்குவோம்.

**வாழ்க தமிழ்.!**
**வாழ்க திருவள்ளுவம்.!!**




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற

# KANAGAAMBIKAI

## Pawn Brokers

30
வருட சேவைகள்

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!

# கனகாம்பிகை

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...

**Pawn Bank Inc.™**
Your Satisfaction is Our Success

(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198

(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா
பெருமையுடன் வழங்கும்

# 20 ஆவது பொங்கல் விழா-2023

காலம் - 21-01-2023 (சனிக்கிழமை)
இடம் - கனடா கந்தசாமி கோவில் - விழா மண்டபம்
733 Birchmount Road , ஸ்காபுரோ
நேரம் - மாலை 5.30 மணி

சிறுவர் நிகழ்ச்சி, சங்கீதம். நடனம், திரையிசை நடனம் தாளவாத்தியக் கச்சேரி, மிருதங்கசோலோ, நாட்டியநாடகம் கரியோக்கிப்பாடல்கள் மற்றும் ஏராளமான நிகழ்வுகள் வழமைபோல வெகுசிறப்பாக இடம்பெறவிருக்கின்றன.
கனடா வாழ் இணுவில் பிள்ளைகளின் கலைச்சங்கமமாம் பொங்கல் விழாவிலே பங்கு பற்றித் தமது கலைத்திறமைகளை வெளிக்கொணர விரும்பும் இணுவில் பிள்ளைகள் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்போடு அழைக்கிறோம்.

சாந்தினி சர்வானந்தா 647-200-2177
முருகேசு கிருபாகரன் 416-430-0422
கஜெஜெயன் பரராசசேகரன் 416-732-5898

## சொல்வல்லவன் சோர்விலன் "சொல்வேந்தன்" கோபிநாத் வாழிய பல்லாண்டு



*நாநலம் என்னும் ... நலன் உடையான்:*
*கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்*
*மகிழ்ந்து செவிமடுக்கும் சொல்லுடையான்,*
*திறன் அறிந்து சொல்லும் தமிழ் முனைவோன்,*
*சொற்சிலம்பாடி பின் வெல்லுவான்,*
*அஞ்சான் அவன் இகல்வெல்லும் திறன்*
*எவர்க்குமில்லையென ஞாயிறு தோறும்*
*ஞாலம் வியக்கும் சொற்போர் விவாதம்*
*சுவைத்திடவைக்கும் 'சொல்ஏர் உழவன்'*
*தொலைக்காட்சி 'விஜய்'இல் தோன்றினாயே,*
*மலைக்கவைத்து உயிர்ப்புடன் இயக்கும்*
*எங்கள் தோழர் கோபிநாத் வாழிய! வாழிய!*

*எட்டுத் திக்கும் ஒலித்திடும் எங்கள்*
*தேமதுரத் தமிழோசை*
*பட்டுத்தெறித்து அட்டியின்றி யாவரும் கேட்டிட வைக்கும்*
*'நீயா நானா?' விவாத முதல்வன்,*
*முழங்கிடும் தமிழில், விரிந்தது*
*'தமிழர் மரபுத்திங்கள்' கனடிய மண்ணில்!*
*மகிழ்ந்தனர் மக்கள்: மாணவச் சிறார்கள்,*
*மாதர் அணியின் மாண்புடை மங்கையர்,*
*வாதம் புரிவது எப்படியென்று மகிழ்வுடன்*
*கேட்டு, வாரம் தோறும் அறிவினைத் தேக்கிட,*
*'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கென',*
*சிங்கத் தமிழர் புலம்பெயர் வாழ்வில்*
*சொந்தத் தாயின் மொழியினைச் சுவைத்திடவைக்கும்*
*சுந்தர புருஷ'ன் கோபிநாத் எழுதிய*
*'தெருவெல்லாம் தேவதைகள்'*
*கவிதைத் தொகுப்பில் கரைந்து போனவர்களுள்*
*நானும் ஒருவன்!*

*இனிய தமிழ் இளவரசி* ***'வெண்பா'*** *வின் தந்தையிவர்*
*பனிவிழும் தேசத்தின் உறவுகளில் நண்பரிவர்,*
*குறுமுனியின் தமிழறிந்து மறுமொழிகள் உரைத்துவிடும்*
*திருமுருகன் அருள் விளங்கும் அழகிய தமிழ்மகன்*
*வாழி நீ பல்லாண்டு!*

*கல்லூரி அரங்குகளில்,*
*உன் சோர்வகற்றும் சொல்வீச்சுக் கேட்டு*
*என்னை உயிர்ப்பிக்கும்வேளை மீண்டும்*
*உன்முன் மாணவனாகிறேன்!*
*'காத்திருப்பது சுகம்தான்*
*நீ வருவது நிச்சயம் எனும்போது"*
***(இது கோபியின் கவிவரிகள்)***

*காத்திருந்தேன்: வந்துவிட்டாய்!*
*களிப்புமிகுதியால் கவிதையால் வாழ்த்துகிறேன்!*
*சந்தோசக்காற்று நம் ஜன்னலில் வீசட்டும்,*
*சரித்திரம் நாளை நம் சாதனை பேசட்டும்!"*
***(கோபியின் தாரக மந்திரம்)***
*கனடியத் தமிழர்களின் உள்ளம் கவர்ந்த*
*கோபி எனும் தலைவனுக்கு*
*'உதயன்" கூறும் நல்வாழ்த்துக்களுடன்*

***- வீணைமைந்தன் (மொன்றியல், கனடா) -***

## பருத்தித்துறை மக்கள் ஒன்றியம் கனடா
## 19வது வருடாந்தக் கலை இரவு 2023

காலம்: சனிக்கிழமை 21-01-2023
மாலை 6.00 மணி

இடம்: The Queen Palace Banquet Hall
1713 Brimley Road
Scarborough, ON M1P 3G5
(Brimley & Brimorton)

கலை இரவில் பாரம்பரியக் கலைகளான பறை. சிலம்பாட்டம் என்பனவற்றோடு நாடகம். நடனம். இன்னிசைக்கச்சேரி ஆகியன இடம்பெறவுள்ளன. அத்தோடு இரவு உணவும் பரிமாறப்படும்.
பருத்தித்துறை வாழ் மக்கள். அங்கத்தவர்கள். நண்பர்கள். நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி.

ந. சிவசுப்பிரமணியம் - மணியம் மாஸ்ரர்
தலைவர்
தொடர்புகட்கு: (647) 545-9905

க. பாலேஸ்வரன்
கௌரவ செயலாளர்
தொடர்புகட்கு: (416) 358-6853

*உங்கள் திறமைக்கு அதிஷ்டம் காத்திருக்கிறது*

## வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்!



**எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும் உலகளாவிய திறனாய்வுப் போட்டி - 2023**







தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் | - 30,000. |
| இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 25,000. |
| மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 20,000. |
| நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 15,000. |
| ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் | - 10,000. |
| 10 பாராட்டுப் பரிசுகள் இலங்கை ரூபாய்கள் தலா | - 5,000. |

குரு அரவிந்தன் அவர்களின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி. குறைந்தது 2 புதினங்கள் அல்லது 4 சிறுகதைகள் பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1500 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் ***(Unicode and Word)*** அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவ, மாணவிகளாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாக வெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது. மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும்.

உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய கடைசி நாள்: 31.03.2023

போட்டி முடிவுகள் 2023 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல் : ***kurufanclub@gmail.com*** இணையம் : ***kurunovelstory.blogspot.com***

***<https://canadiantamilsliterature.blogspot.com/>***

இந்த அறிவிப்பினை உங்களின் முகநூல் பக்கத்திலும் பகிர்க்குழுக்களிலும்; ***(whatsapp)*** பகிர்ந்து உதவுங்கள்.

நன்றி!

**சுலோச்சனா அருண்,**
செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம்.

# இவ்வார ராசிபலன்

## 13-01-2023 வெள்ளி தொடக்கம் 19-01-2023 வியாழன் வரையும்




**மேஷம்:** ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும் வாரம். நண்பர்களால் நன்மை உண்டு. வாழ்வில் வசந்தம் உண்டு. வயிற்று உபாதைகளும் உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. மற்றவர்களால் மேன்மையுண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். வணிகத்தொழில் வளம் கூடும். உறவினர் வருகை உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். பழையக் கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். உடலில் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் கடுமையாகும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. கணவன், மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டு. உங்களின் தனித்தன்மை வெளிப்படும். நன்மை தரும் நேரம்.

வழிபட வேண்டிய தெய்வம்: வனதேவதை, அதிர்ஷ்ட எண்: *1,4,7,9*
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,J




**ரிஷபம்:** கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும் வாரம். பயணம் அனுகூலம் தரும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில்போட்டி அதிகமாகும். புதிய உடன் உருவாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உடல்நலத்தில் கவனம் தேவை. வாகனச் செலவுகள் அதிகரிக்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். பணியாட்கள் ஆதரவு அதிகமாகும். பாதகமான சூழ்நிலை விலகும். நண்பர்களால் நன்மையுண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேர்க்கையுண்டு. காரிய வெற்றி கிட்டும். உத்தியோக உயர்வு தரும். மன அமைதி கூடும். பணவரவு அதிகரிக்கும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். காரிய அனுகூலம் கிடைக்கும். சுபச்செய்தி வரும். சம்பள உயர்வு கிடைக்கும். முதுகில் வலி வந்து போகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அங்காரக பகவான், அதிர்ஷ்ட எண்: *2,9,0,3*
அதிர்ஷ்ட நிறம்: சந்தன நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**மிதுனம்:** காதல் கைகூடும் வாரம். விரயங்கள் அதிகரிக்கும். போட்டிகள் மறையும். விவாக முயற்சி வெற்றி தரும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. உறவினர்களால் அனுகூலம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். சக ஊழியர்கள் உதவிகள் உண்டு. ஆரோக்கியம் சீராகும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகரிக்கும். பணியில் கவனம் தேவை. அரசியல் ஆதாயம் உண்டு. புண்ணியம் சேரும் நாள். கலைத்துறையில் முன்னேற்றம் தரும். மாணவர்கள் திறமைகள் பளிச்சிடும். பொறியியல் துறை லாபம் தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். ஆடை, அணிகலன் சேரும். உடல்நலம் திருப்தி தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர்கள் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். சகோதரியால் லாபம் உண்டு. கமிஷன் தொழில் திருப்தி தரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *5,7,9,2*
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,O




**கடகம்:** வருமானம் திருப்தி தரும் வாரம். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. தொழில் நன்மை தரும். செலவுகள் தவிர்க்கவும். வேலைபளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதிய பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். செல்வாக்கு அதிகமாகும். இடமாற்றம் நன்மை தரும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். அரசியலில் பொறுமை தேவை. வீண் வம்பு வரும். பாதகமான சூழ்நிலை விலகும். வினோதமான எண்ணங்கள் விலகும். பிரியமானவர்களின் சந்திப்பு ஏற்படும். பெற்றோர்களின் ஆதரவு அதிகரிக்கும். வாகனச் செலவுகள் உண்டு. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். உத்தியோக உயர்வு கிட்டும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். பணியில் பாராட்டு கிட்டும். கௌரவமான காலம். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பதவி உயர்வு கிட்டும். கலைத்தொழில் லாபம் தரும். கண்நோய் வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: *6,2,3,1*
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,H




**சிம்மம்:** முயற்சிகள் வெற்றி தரும் வாரம். வீண் வம்பு அகலும். வியாபாரத் தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைக்கூடும். வேலை பளு கூடும். சந்தோஷமான காலம் முத்தான வாய்ப்பு பெருகும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. திருப்புமுனை ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். காதல் கசக்கும். மனோ பயம் அகலும். மங்கலச் செய்தி வரும். குடும்ப வளர்ச்சி கூடும். பழையக் கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். கல்வியில் ஆர்வம் கூடும். கட்டிட தொழில் லாபம் தரும். பங்குத்தொழில் கவனம் தேவை. பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்படும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீக சொத்துக் கிடைக்கும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகனச் செலவு ஏற்படும். பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: *9,7,5,3*
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,D


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**கன்னி:** அணிகலன் சேரும் வாரம். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்துபோகும். கடன் வாங்க நேரிடும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கடன் பிரச்சனை உருவாகும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாக திறன் கூடும். உடன்பிறந்தோரால் உதவி கிடைக்கும். முக்கிய எண்ணங்கள் நிறைவேறும். மனைவியால் அமைதி கொடுக்கும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். போதிய வரவு திருப்தி தரும். வாழ்க்கை வசதி பெருகும். வீண் வம்பு ஓடி மறையும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மங்களச் செய்தி வரும். மனைவி வழி சொந்தம் வறுமை ஏற்படும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவுகள் உண்டு. வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்களின் ஆலோசனைப் பலன் தரும். திட்டம் வெற்றி பெறும். நட்டம் இல்லாத நன்மை அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: *4,7,9,3*
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,T




**துலாம்:** தொழில் லாபம் பெருகும் வாரம். நண்பர்கள் உதவி கிடைக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு யோகம் கூடும். கலகலப்பான சூழ்நிலை அமையும். விளையாட்டுத்துறை லாபம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். வேலை பளு அதிகரிக்கும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். நன்மதிப்பு உருவாகும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றி தரும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். உடல்நலத்தில் கவனம் தேவை. ஆபரணப் பொருள்கள் சேரும் காலம். எண்ணிய காரியம் கைகூடும். தொழிலில் எதிர்பாராத லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரும். பதவி உயர்வு வரும். வெற்றி நிலை தொடரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு ஆறுதல் தரும். வழக்குகள் சாதகமாகும். இல்லத்தில் நல்லவை நடக்கும். சுபகாரியம் கூடி வரும். பொதுபணியில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ தேவி, அதிர்ஷ்ட எண்: *3,4,2,0*
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Z




**விருச்சிகம்:** உற்சாகம் அதிகரிக்கும் வாரம். விவசாயம் கை கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்த தொழில் அமையும். தொழிலில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். வியாபார மந்த நிலை அகலும். பணிச்சுமைகள் குறையும். தொலைதூர பயணம் உண்டு. சொத்துக்கள் சேர்க்கை உண்டு. வியாபாரம் லாபம் தரும். வாய்ப்பேச்சில் கவனம் வேண்டும். வறுமை நிலை மாறும். உற்சாகம் அதிகரிக்கும். தீய எண்ணம் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கூடும். பூர்வீகச் சொத்துச் சேரும். தொல்லைகள் விலகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். அரசு பணியில் மாற்றம் வரும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். நிதி நிலைமை சீராகும். மற்றோரின் வாழ்த்து கிடைக்கும். புத்தாடை ஆபரணம் சேரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். கடனால் பிரச்சனை வரும். விவசாயம் விளைச்சல் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். மனதெளிவு கிட்டும். கலைத்தொழில் உயர்வு பெறும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். எடுத்தக் காரியத்தில் தொடுத்த வெற்றி அடைவீர்கள். அரசு உதவிகள் கிடைக்கும். பூர்வீகச் சொத்து சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: *7,9,1,2*
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,K




**தனுசு:** இனிய செய்தியால் மனம் மகிழும் வாரம். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் தனவரவு உண்டு. அரசியலில் புகழ் சேரும். அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். தொழில் சிக்கல் மறையும். நிம்மதி பெருகும். பழைய நண்பர் உதவி கிட்டும். இடமாற்றம் தடைப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். எதிரிகள் பலம் குறையும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். பழிச்சொல் தேடி வரும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். கூட்டுத்தொழிலில் லாபம் தரும். பணிமாற்றம் ஏற்றம். உத்தியோகத்தில் திருப்தி ஏற்படும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். சோதனைகள் குறையும். கல்வி சலுகைகள் கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து போகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *5,3,7,4*
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,C




**மகரம்:** கலைஞர்களுக்கு புகழ் கூடும் வாரம். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றியாகும். வீடு, மனை யோகம் உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமம்பட்ட காரியங்கள் நிறைவேறும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். அணிமணிகள் சேரும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வேலை பளு கூடும். சொந்த வீடு வாங்க முயற்சி செய்யலாம். திருமண முயற்சி வெற்றி தரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்தொழில் முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். உடல்நலத்தில் அக்கறை தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர வழியில் சகாயம் கிட்டும். பேச்சுத் திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. பொதுப்பணியில் ஆர்வம் கூடும். கூட்டுத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: *4,2,8,7*
அதிர்ஷ்ட நிறம்: பால் வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O

**(தொடர்ச்சி *28* பக்கம்)**

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ **சங்கர் அன் கோ**

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள், தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**இனிய புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

tasty தமிழா (TM)

TASTY தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்

Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.

இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.

காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

**SHANKAR & CO**

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8

Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)



**கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை**

**NEW LIFE FRESH START**

**வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு**

**Reduce your debts upto 80%**

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

## இவ்வார ராசிபலன்

(26 பக்கத் தொடர்ச்சி)




**கும்பம்:** சுபச்செய்தி வரும் வாரம். நலிவுற்ற தொழில் பொலிவு பெறும். புதிய ஆடைகள் சேரும். அலுவலகப் பணிகளில் ஈடுபடுவீர்கள். வாகன செலவுகள் ஏற்படும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். வயிறு உபாதை தோன்றி மறையும். வீடு வாங்கும் யோகம் உண்டு. உடன் பிறப்புக்களால் உதவிகள் கிட்டும். வாக்குவாதங்கள் உருவாகி மறையும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். குடும்ப பாசம் அதிகரிக்கும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெயர், புகழ் கௌரவம் தொல்லை தரும். பிராயணம் தொல்லை தரும். மாலை நேரத்தில் இனிப்பான செய்தி வரும். உணவு பிரியம் அதிகரிக்கும். காதலில் புத்துணர்வு இருக்கும். முகப்பொலிவு கூடும். பண நடமாட்டம் கூடும். மனக்கசப்பு நீங்கும். வாழ்த்துக்கள் வந்து சேரும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். முத்தான வாய்ப்புகள் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**மீனம்:** நிர்வாகத்திறமை அதிகரிக்கும் வாரம். நினைத்தது நிறைவேறும். முன்னேற்றம் காணும் முக்கியமான காலம். மாலை நேரத்தில் மனம் மகிழும் செய்தி வரும். அந்தஸ்து அதிகமாகும். பழையக் கடன் ஒழியும். காரியம் இழுபறியாகும். உடல் உஷ்ணம் ஏற்படும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். வீண் பழி அகலும். அரசியலில் புகழ் கூடும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். கடன்சுமை குறையும். துன்பம் விலகும். உணவு விடுதி லாபம் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பெண்களுக்கு நாவடக்கம் தேவை. முன்னேற்றம் காணும் முக்கியமான நாளாக அமையும். ஆடை, ஆபரணச் சேர்க்கையுண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்கசப்பு ஏற்படும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சோதனைகள் சாதனைகளாக மாறும். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். பங்குச்சந்தை லாபம் தரும். பழைய பகை மாறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,8,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,A

## கடந்தவையும் கடப்பவையும் (41)

*விசாலமான பெரும் பரப்புக் காணிகளுள் - மிக*
*உயரமான வேலிகளோடு நெருக்கமாக அடைக்கப்பட்ட*

*பயிற்சிக்குரிய பாசறைகள் பலவிடத்தும் வரும் முன்பே - அங்கு புதிய படை*
*எழுச்சிக்குரிய நிகழ்வொன்று நிகழ்ந்த கதை - ஆம்*

*அன்று,*

*நெருக்கமான தொடர் வீடுகள் அதிகம் கொண்ட அவ்விடத்து*
*ஆரம்பப் பாசறையும் அழிவுக்கு உள்ளாகியதால்*

*ஊர்ப் பகுதிக்குள் ஓரிரு பாசறைகள் - அவையும்*
*ஆருமில்லா வீடுகளில் அமைக்கப்பட - அதில்*

*அன்றைய பெரியவர்கள் ஆரம்ப உறுப்பினர்கள் - களத்தில்*
*நின்றாடிக் களைத்த பின்பு - அங்கே*

*வந்தேதான் இளைப்பாறி - அங்கு மீண்டு*
*வந்தவர் வந்து நிற்க நின்றவர் போவார் - களமாட*

*ஆத்ம பலம் ஒன்றையே நம்பிய அவர்களுக்கு - அப்போ*
*பாத்திரங்களில் வருவதில்லை உணவு*

*களைத்து வந்து இருந்த போதும் கட்டுச்சோறே - இருந்தால்*
*கிடைக்கும் அல்லவெனில் அதுவுமில்லை - ஆனாலும்*

*தெரியவந்தால் பாட்டிதான் விடுவாளா பசித்திருக்க*
*அறிந்துவிட்டாள் அடுத்தநாள் வைதிடுவாள் உரிமையாக*

*அப்படித்தான் உண்டி கொடுத்து தங்குதற்கு*
*ஏற்றபடி உறையுளும் உவந்தளித்து - முழுவதுமாய்*

*பிரிந்த போது பெற்றவர்போல் பெரும் துயர்கொண்டு*
*புலம்பியழும் பாட்டிகளும் - அங்கு*

*அவற்கேற்ற தாத்தாக்களும் ஆரம்ப காலத்தில்*
*மிகப்பலமாய் இருந்த தெல்லாம் எவரறிவார்?*

*கண்ணாற் பார்க்காத பழங்காலப் பாசறையை - புலவர் இப்படிச்*
*சொன்னார் என்பதை பலமுறையும் படித்து*

*தமிழனின் பெருமையை திரும்பத் திரும்பப் பேசுகிறோம்*
*நாமிருந்த காலத்துப் பாசறையை - அன்று*

*தேசத்திற்காய் அவர் அழிந்த விதத்தினை*
*பேசுதற்கு விரும்பாவிடின் நடந்தவை - என்றுமே*

*தெரியாது மறைந்துவிடும் - இவை*
*தெளிவாக மனங்களில் இருக்கும்போதே பார்தத்தவற்றை*
*எழுதிவைப்போம்.*

*எழுச்சிக்குரிய புதிய படையும்*
*பயிற்சிக்குரிய பெரிய பாசறையும்*

*(தொடரும் அறிவோம்)*

**-- உமா மோகன் - *Montreal- Canada* --**

## இமயமலைப்பகுதியில் இயற்கைப் பேரிடரால் பூமிக்குள் புதையும் புனித நகரம்




இமயமலைப் பகுதியில், இயற்கை பேரிடரால் ஜோஷிமத் புனித நகரம் புதையுண்டு போகிற பேராபத்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதனைத் தொடர்ந்து பிரதமர் அலுவலகம் பல்வேறு தரப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இமயமலைப் பகுதியில் இயற்கை எழில் கொட்டிக் கிடக்கும் உத்தரகாண்ட் மாநிலத்தின் சமோலி மாவட்டத்தில் அமைந்திருக்கும் அழகிய சிறு நகரம்தான் ஜோஷிமத். ஜோதிர்மத் என்றும் அழைக்கப்படும் இந்த மலை நகரம், ரிஷிகேஷ் - பத்ரிநாத் தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. கடல்மட்டத்தில் இருந்து 6 ஆயிரத்து 150 அடி உயரத்தில் அமைந்துள்ள ஜோஷிமத் நகரில் சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கின்றன. பத்ரிநாத் போன்ற புகழ்பெற்ற இந்து புனிதத்தலங்களுக்கும், ஹேமகுந்த் சாகிப் என்ற சீக்கிய புனிதத்தலத்துக்கும் நுழைவாயிலாக ஜோஷிமத் உள்ளது. ஆதிசங்கரர் நிறுவிய 4 பீடங்களுள் ஒன்றும் இங்கு அமைந்திருக்கிறது.

இமயமலை மலையேற்றப் பாதைகள் தொடங்கும் இடமாகவும், இமயமலையின் சுற்றுலாத் தலங்களுக்கு செல்வதற்கான தொடக்கப்புள்ளியாகவும் இந்த நகரம் அமைந்திருக்கிறது. சீனா எல்லையையொட்டிய நகரம் என்பதால் பிரதான ராணுவ தளமாகவும் உள்ளது.

இப்படி ஆன்மிக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சுற்றுலா ரீதியாகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள ஜோ‌ஷிமத்தான், தற்போது "புதையும் நகரம்" ஆகியிருக்கிறது.




கடந்த 15 நாட்களில் இங்கு 500-க்கும் மேற்பட்ட வீடுகள், கடைகளிலும், சாலைகளிலும் விரிசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு கோவில், மண்ணுக்குள் புதையுண்டது. சில இடங்கள் சரிந்து விழுந்தன. இந்த சம்பவங்கள், ஜோஷிமத்தில் வசிக்கும் சுமார் 20 ஆயிரம் பேரையும் அச்சத்தில் ஆழ்த்தியிருக்கிறது. எந்நேரமும் ஒட்டுமொத்த நகரமும் பூமிக்குள் விழுங்கப்பட்டுவிடுமோ என்று பீதியில் உறைந்திருக்கிறார்கள். அதையடுத்து இங்கிருந்து மக்களை வெளியேற்றும் பணி தொடங்கியிருக்கிறது. இதுவரை சுமார் 600 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஜோஷிமத் நகரில் அதிகாரிகளும், நிபுணர்களும் முகாமிட்டு, நிலைமையை கண்காணித்து வருகின்றனர்.

இந்தநிலையில், இந்த பிரச்சனை தொடர்பாக பிரதமர் அலுவலகம் ஆலோசனை நடத்தியது. பிரதமர் அலுவலக செயலாளர் மிஸ்ரா தலைமையில் பல்வேறு துறைசார் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர். உத்தரகாண்ட் மாநில அரசு அதிகாரிகள், தேசிய பேரிடர் மீட்பு பணியினரும் இந்த ஆலோசனையில் பங்கேற்றனர். அவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து கருத்து தெரிவித்தனர்.

சினிமா

## ஆசிய திரைப்பட விருதுகள். 6 பிரிவுகளில் பொன்னியின் செல்வன் படம் பரிந்துரை



ஆசிய திரைப்பட விருது விழாவிற்கு ஆறு பிரிவுகளில் பொன்னியின் செல்வன் திரைப்படம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மணிரத்தினம் இயக்கத்தில் இரண்டு பாகங்களாக உருவாகி சென்ற செப் 30-ம் தேதி பொன்னியின் செல்வன் திரைப்படத்தின் முதல் பாகம் வெளியானது. இப்படத்தில் கார்த்தி, விக்ரம், ஜெயம் ரவி, ஐஸ்வர்யா ராய், த்ரிஷா என மிகப் பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது. மேலும் இத்திரைப்படத்தை மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனமும் லைகா நிறுவனமும் இணைந்து தயாரிக்க படத்திற்கு இசை புயல் ஏ.ஆர். ரகுமான் இசையமைத்தார். இத்திரைப்படமானது தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட ஐந்து மொழிகளில் பிரம்மாண்டமாக வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இதைத்தொடர்ந்து இரண்டாம் பாகம் வருகின்ற ஏப்ரல் மாதம் 28ஆம் தேதி வெளியாக இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிலையில் ஆங்காங்கில் நடைபெற உள்ள 16-வது ஆசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் பொன்னியின் செல்வன் திரைப்படம் ஆறு பிரிவுகளில் விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது. அதன்படி பொன்னியின் செல்வன் திரைப்படம் சிறந்த படம், சிறந்த இசை, சிறந்த எடிட்டிங், சிறந்த ஒளிப்பதிவு, சிறந்த கலை இயக்குனர், சிறந்த உடை அலங்காரம் என ஆறு பிரிவுகளின் கீழ் பரிந்துரை செய்யப்பட்டு இருக்கின்றது.


தாயகத்தில் நலிந்த நோயாளிகளின் இதய சத்திர/
சிறுநீரக சிகிச்சைக்காக மாபெரும் இன்னிசை விருந்து
பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதய தெய்வம்
எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்களின் வாழ்வை கொண்டாடும் முகமாக
MGR 106
இன்னிசைப் பொழுது
27th JANUARY Friday 2023 7PM
Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough
Help Save A Life
உயிர் காக்க உதவுங்கள்
SCAN ME
Shianaaz
FREE PARKING
LIFE SAVING HEART SURGERIES | MOBILE MEDICAL CLINIC ( KILINOCHCHI) | LIVELIHOOD ASSISTANCE FOR THE NEEDY
416-200-7652, 647-526-7652
www.Nivaranam.com
$25 $50 & $100
திரட்டப்படும் நிதி முழுவதும் ஏழைகளுக்கான இலவச இருதய சத்திர சிகிச்சைக்கும், கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவமனை திட்டத்திற்கும், போரினால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதர உதவிகளுக்கும் இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
(முழு நிதி விபரங்களும் இணையத்தில் பகிரப்படும்)
100% of proceeds will be used for projects without any expences deducted
செந்தில் குமரனின் நிவாரணம்


Home Renovations
Coverall Group Inc.
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Residential
* Commercial
* Building Permits
Contact: Siva
416-706-8160

# அன்பின் தொனி - 676

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**அண்மைக்கால சில தவறான போதனைகளும் வழிமுறைகளும்**

1. மரித்துப்போனவர்களுக்கு ஞானஸ்நானம் - Baptism of the dead
2. ஒருபால் திருமணம் - Same sex marriage
3. இரக்கக் கொலை - Mercy killing (Euthanasia)
4. கருச் சிதைவு - Abortion
5. உதவித் தற்கொலை - Assissted suicide

**மரித்துப்போனவர்களுக்கு ஞானஸ்நானம்** - Baptism of the dead

மரித்துப்போன ஒருவர் உலகில் அவர் உயிரோடு வாழ்ந்தபோது எப்படிப்பட்ட ஜீவியம் ஜீவித்தார் என்பதைக் குறித்தோ, அவர் உயிரோடிருக்கும்போது அவருடைய விருப்பு, வெறுப்பு, விசுவாசம் போன்ற எந்தவித விபரமோ அறிவோ இல்லாதபடி, மரித்தோர் உயிர்தெழுவார்கள் என்ற நம்பிக்கையுடையவர்கள் தமது மரித்துப்போன உறவினர்களுக்காக ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு இயேசு கிறிஸ்துவின் உயிர் தெழுதலைக்குறித்து எழுதும்போது கீழ்க்கண்டவாறு குறிப்பட்டார்:

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தாரென்று பிரசங்கிக்கப்பட்டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்? மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்க வில்லையே. கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், தேவன் எழுப்பாத கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று நாங்கள் தேவனைக் குறித்துச் சாட்சிசொன்னதினாலே, தேவனுக்காகப் பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களாகவும் காணப்படுவோமே. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை. கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே. இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந் தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும், அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்ய வேண்டியது பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே, ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப் படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? **- 1 கொரிந்தியர் 15: 12-29**

இப்பகுதியிலே மரித்துப்போன விசுவாசிகளுக்கோ அவவிசுவாசிகளுக்கோ ஞானஸ்நானம் கொடுக்கும்படியாக பவுல் அடிகள் போதிக்கவில்லை, மாறாக உயிர்த்தெழுதல் உண்டென்பதை விசுவசித்தவர்கள் அப்படிச் செய்ததற்கான காரணத்தைச் சுட்டிக்காட்டினாரே தவிர, அதைப் பின்பற்றும்படியாகப் போதிக்கவில்லை. மேலும் இதுபற்றி வேறு எந்த வசனமோ, விளக்கமோ வேதாகமத்தில் எங்கும் கூறப்படவில்லை.

இந்த விளக்கங்களைச் சரிவர பல வேத வசனங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து பார்க்காதபடி, மேலெழுந்தவாரியாக இந்த ஒரு வசனத்தை *(1 கொரி; 15: 29)* தவறாகப் புரிந்துகொண்டு, அண்மைக் காலங்களிலே ஆரம்பிக்கப்பட்ட சில கிறிஸ்தவ சபைகள் மரித்துப்போனவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுவதை தமது சபை மக்களுக்குப் போதித்து, அதைச் செயற் படுத்தியும் வருகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் அவனவனுடைய இரட்சிப்பை தான்தானே பெற்றுக்கொள்ளவேண்டும். அல்லாமல் இன்னுமொருவர் அவனுக்காகப் பரிந்துபேசியோ, பிரதிநிதப்படுத்தியோ பெற்றுக்கொடுக்க முடியாது. ஊயி ரோடு இருக்கும்போது தேவனுக்குப் பிரியமில்லாத வாழ்க்கை வாழ்ந்த ஒருவருக்காக, அவர் மரித்தபின் அவருடைய உறவினர் அவருக்காக ஞானஸ்நானம் பெறுவதன்மூலம் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு அவர் பரலோக ராஜ்யம் போய்விடமுடியாது. இது எவ்வளவு தவறான போதனையும், வேதத்திற்கு முரணானதும், அநீதியான செயலுமாகும்.

**பாவ மன்னிப்பும் இரட்சிப்பும்**

பாவ மன்னிப்பைக் குறித்தும், இரட்சிப்பைக்குறித்தும் பரிசுத்த வேதாகமம் விபரமாகவும் விளக்கமாகவும் கூறியிருப்பதை இங்கு கவனிக்கலாம்: தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். **- நீதிமொழிகள் 28: 13**

**தொடரும்...**


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS CRPLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# MORTGAGE FINANCIAL

SUBRA MORTGAGE SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- VACANT LAND
- CONSTRUCTION

"எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் உறவினர் அவர்தம் குடும்பத்தினர் அனைவருக்கும் தைப்பொங்கல் புதுவருட வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்"




- 1st, 2nd & 3rd Mortgages
- Refinance
- Equity lind of Credit
- Self-employed
- Multi-rental properties
- Purchase
- Switches
- Pre-approvals
- Renewal
- New immigrants

Office: 416-660.5656
Fax: 647451.3099
Toll: 1-844-678.2721

Unit #406, 1585 Markham Rd,
Scarborough, ON M1B 2W1

www.subra.com

WE DEAL WITH ALL BANKS Brokerage #10530

Powered By

MORTGAGE ALLIANCE · Scotiabank · radius financial · EQUITABLE BANK · RMG mortgages · TD Canada Trust · RFA BANK OF CANADA · FIRST NATIONAL FINANCIAL LP · HOME TRUST · MCAP










26 ஆம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்



உதயம் 1397 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 13, 2023

# ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள Majestic City தமிழர் உள்ளக வர்த்தக வளாகத்திற்கு சென்று வியந்தபடி கண்டு களித்த "நீயா நானா" புகழ் கோபிநாத்



நாளை 14-01-2023 சனிக்கிழமையன்று மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகி சீனக்கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள விழாவில் கலந்து கொள்ளவென கனடா வந்துள்ள நீயா நானா“ புகழ் கோபிநாத் இன்று மதியம் ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள **Majestic City** தமிழர் உள்ளக வர்த்தக வளாகத்திற்கு விஜயம் செய்து வியந்தபடி கண்டு களித்தார்.




# "அனலை எக்ஸ்பிறஸ்" சர்வ தேச தொலைக்காட்சி ஊடக நிறுவனம் படைத்தளித்த "பாரம்பரியம்" முழு நீள முத்தமிழ் விழா வரலாறு படைத்தது

கடந்த சனிக்கிழமையன்று 7ம் திகதி ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள “சீனக் கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற “அனலை எக்ஸ்பிறஸ்“ சர்வ தேச தொலைக்காட்சி ஊடக நிறுவனம் படைத்தளித்த “பாரம்பரியம்“ முழு நீள முத்தமிழ் விழா வரலாறு படைத்தது என்றே கூறவேண்டும். 500 இற்கும் அதி-கமான இளைய தலைமுறை இசை நடன வாத்திய கலைஞர்கள் பங்கெடுத்த இந்த முழு நீள நுண்கலை முத்தமிழ் விழா தொடர்ந்தும் வருடா வருடம் நடத்தப் பெற வேண்டும் என்ற வேண்டுகோள் அனைத்து தரப்பினராலும் விடுக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். (உள்ளே விபரமான செய்தி 20ம் பக்கத்தில்)

# ஸ்காபுறோவில் உள்ள Frontline Community Centre நிறுவனம் நடத்திய பொங்கல் விழாவில் நீயா நானா "கோபிநாத்




கடந்த பல வருடங்களாக ஸ்காபுறோ நகரில் வெற்றிகரமாக இயங்கிவரும் சேவை வழங்கும் நிறுவனமான **Frontline Community Centre** நடத்திய இவ்வருடத்திற்கான பொங்கல் விழாவில் கலந்து கொண்டு தனது வாழ்த்துக்ளையும் பகிர்ந்தது கொண்டார் நீயா நானா “புகழ் கோபிநாத். (உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)



Ontario

A WARM WELCOME TO

NEEYA NAANA GOPINATH

Centre for Youth Empowerment and Community Services

January 14, 2023

I want to join our Tamil community in welcoming tonight's special guest and keynote speaker, Neeya Naana Gopinath.

He is a media personality, entrepreneur and an inspiration to Tamil Canadian youth and the broader community. Neeya, thank you for coming to share your professional and life experiences, to help Tamil Canadian youth chart their own paths to achievement.

Many thanks to the amazing team behind the Centre for Youth Empowerment and Community Services for organizing this event. I appreciate your dedication to giving young Tamil Canadians a chance to develop their potential, find opportunities, and give back to the community.

Best wishes for a successful event. Have a wonderful evening.

Doug Ford
Premier

## Premier of Ontario, Canada, welcomes Neeya Naana Fame Gopinath to his Province

# நீயா நானா புகழ் கோபிநாத்தை வரவேற்று வாழ்த்துத் தெரிவித்துள்ள ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக்போர்ட்



தற்போது கனடாவிற்கான தனது நட்புப் பயணத்தை மேற்கொண்டு ரொறன்ரோ வந்துள்ள நீயா நானா புகழ் கோபிநாத் அவர்களை வரவேற்று ஒன்றாரியோ மாகாணத்தின் முதல்வர் டக்போர்ட் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இங்கே காணப்படுவது அவரது அலு-வலகம் அனுப்பி வைத்த ஒரு வாழ்த்து மடலாகும்.
அத்துடன் நேற்று முன்தினம் இரவு ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய கோபிநாத் அவர்களை **‘Centre for Youth Empowerment & Community Services’** அமைப்பின் தலைவர் திரு சங்கர் நல்லதம்பி பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் படத்தில் காணலாம்.

ஸ்காபுறோவில் மெக்னிக்கல் - மார்க்கம் சந்திப்பில் அமைந்துள்ள **MAJESTIC CITY MALL** இன் உள்ளே **Unit L1 & L14** என்னும் இடத்தில் இயங்கிவரும் **IMMA TRADING COMPANY** யில் நாளை சனிக்கிழமை நடைபெறும் “நீயா நானா? புகழ் கோபிநாத் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிக்கான **$50 $20** ரிக்கட்டுக்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம். நிறுவனத்தின் தொலைபேசி இலக்கங்கள்: *416 722 6998* **or** *416 930 0910*

# ஒன்றாரியோ மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் தலைமையில் இடம்பெற்ற "மார்க்கம் தைப் பொங்கல் விழா"



முன்னாள் மார்க்கம் மாநகர சபை உறுப்பினரும் தற்போதைய ஒன்றாரியோ மாகாண சபையின் மார்க்கம்- தோர்ன்ஹில் தொகுதி உறுப்பினருமான லோகன் கணபதி அவர்களின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை 8ம் திகதி இடம்பெற்ற “மார்க்கம் தைப்பொங்கல் விழா“ 2023 மிகவும் சிறப்பாக நடைபெற்றது.
பிற்பகல் 3.00 தொடக்கம் இரவு 11.00 மணி வரை இடம் பெற்ற இந்த விழாவில் முத்தமிழின் அழகையும் ஆழத்தையும் அற்புதத்தையும் தெளிவாக விளக்கும் வண்ணம் பல கலைப் படைப்புக்கள் மேடையேற்றப்பெற்றன. (உள்ளே விபரமான செய்தி 20ம் பக்கத்தில்)